தமிழீழ ஆவணக் காப்பகம்

கலை கலாச்சார அரசியல் சமூக ஏடு    ஏப்பிரல் 1991





# எரிமலை

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## விடுதலை வீரன்

அன்பே வடிவானவர்களுக்கு
மரணம் எப்போதும் நண்பன்
எனவே எனக்குப் பயமில்லை

முதுகில் கனக்கும்
எந்திரத் துவக்குடன்
வனங்களில் அலைகிறேன்
காலடிகளில் பதிகின்றன
நம்பிக்கையின் சுவடுகள்

நான் நிழல்
எனது செயல்களே நிஜம்
கண்ணிவெடிகளின் முழக்கம்
படைத் தளபதியின்
உறக்கத்தைச் சிதறடிக்கும்
நேற்றிருந்த சிப்பாய்
இன்று இறந்திருப்பான்

எல்லோரும் தங்களை உலகுக்குக்
காட்டத் துடிக்கும் போது
நானோ உலகத்தின் கண்களிலிருந்து
மறைந்து நின்று போராடுகின்றேன்
'எனது மக்களே எனது மலைகள்'
தங்கள் குகைகளில் என்னை
மறைத்து விடுவார்கள்
என்றைக்காவது ஒரு நாள்
எதுவும் நிகழலாம்
இராணுவத்தால் அரவமில்லாமல்
பிடிக்கப்படலாம்.
யாரும் காணாமல் நதிக்கரையில்
பிணமாகக் கிடக்கலாம்

அது நானல்ல. என் நிழல்
நிழலை மட்டும் தான்
அவர்களால் அழிக்க முடியும்

எந்தக் கவிஞனும்
என்னைப் பாடமாட்டான்
ஆனால் கிராம மக்கள்
என்னை மறக்க மாட்டார்கள்
துயரம் மௌனமாய் கவிய
நான் இல்லாமல் போனதெப்படியென
நண்பர்கள் நினைத்திருப்பார்கள்

எப்போதும் காணமுடியாதவாறு
எனது உடல் அழிக்கப்படலாம்

அலைகளோடு எழுந்து
இரவினில் வருவேன்
பனிப்படலமென இறங்கி
வானங்களில் மிதப்பேன்

தோழர்கள் தாகத்துடன்
குளங்களில் குனியும் போது
நீரலைகளில் தெரியும் என் வடிவம்
என்னையே அருந்தி
பயணத்தைத் தொடர்வார்கள்
போராட்டத்தை நோக்கி.

மூலம் - முகமது ஜமால்
ஆங்கிலமொழியில் இருந்து ....

www.tamileelamarchive.com

எரிமலை

கலை கலாச்சார
அரசியல் சமூக ஏடு

பத்தாம் ஆண்டு

ஏப்பிரல் 1991

# தமிழீழத் தாயகம் உதயமாகிறது

தமிழீழம், காலையில் கிழக்கு வானில் சூரியன் மெல்ல உதயமாகி வருதல் போல் உருவாகி வருகிறது. தமிழீழத்தின் பெரும் பகுதியை, விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுள் வைத்திருப்பது மாத்திரமல்ல, அதனை இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து தொடர்ந்து நீண்டகாலமாகப் பாதுகாக்கப் பலமும், மனவுறுதியும், தகுதியும், மக்கள் ஆதரவும் பெற்றிருக்கிறார்கள்.

சிறீலங்கா அரசு தமிழர் தாயகத்தின் மீது தனது இறைமையை, ஆட்சியதிகாரத்தை இழந்து கொண்டு போவதானது, சர்வதேச சட்டங்களின் பிரகாரம், தமிழ்த் தேசிய இனத்தின் புறம்பான இறைமையின் வெளிப்பாடாக, புதிய தமிழீழ நாடு உருப்பெற்று வருவதையே காட்டுகின்றது. தம்மைத் தாமே ஆளும்,தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமையை தமிழீழ மக்கள் நிலைநாட்டி வருகின்றனர் என்பதே இதன் அர்த்தமாகும். இது முழுமையை அடைவதற்குரிய அடிப்படையான விடயங்கள் இயங்கியல் தன்மையில் வளர்ச்சி அடைந்து வருவதையே காட்டுகின்றது.

நிலம் சிதறுண்டு போகாமலும், சிங்களக் குடிசனப் பரம்பலால் பெரிதளவு மாற்றம் ஏற்படாமலும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்நிலப்பரப்பை, அதன் தரை, கடல் எல்லைகளை, அங்குள்ள மக்கள், இயற்கை, அசையும், அசையாச் சொத்துக்களைப் பாதுகாக்க, தமிழீழ மக்கள் இராணுவம், மரபு ரீதியான போர் முனைக்குரிய, முறையான தேசியப் படையாக பெருகி வருகிறது. விடுதலைப் புலிகளின் திட்டமிட்ட நடவடிக்கைகள், மக்களின் இயற்கையான கடின உழைப்பு, புதிய சூழலுக்கு எளிதாக இயல்பாகும் தன்மை, சளைக்காத போராட்டம், சிறீலங்கா அரசாங்கத்தின் பொருளாதாரத்தடை ஆகியவை உயிர்வாழ்தலுக்கும், சமூக, அரசியல், இராணுவ முன்னேற்றத்திற்கும் தேவையான சுய பொருளாதாரத்தை தமிழீழ மண்ணில் கட்டி வருகின்றன. விரைவில் தமிழீழம் சிறீலங்காவில் பொருளாதார ரீதியில் தங்கியிருக்கும் நிலையில் இருந்து விடுபடுவதோடு, பொருளாதாரச் சாத்தியப்பாடு குறித்து பத்தாம்பசலித் தனமாக கேள்வி எழுப்பியவர்கள் முகத்திலும் அறையும்.

தமிழீழ மண்ணில் உறுதிப்பட்டுவரும் சுயநிர்ணய உரிமையும், நிதர்சனமாகிவரும் புதுநாடும், உலகில் பரவலாக நடைபெற்றுவரும் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களும், தமிழ்த் தேசியம் குறித்து அறிஞர்களால் பரப்பப்பட்டுவரும் கருத்துக்களும் சர்வதேச சமூகம், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கும் சூழ்நிலையைத் தோற்றுவித்து வருகின்றன.

ஐ.நா.சபையின் மனித உரிமைக் கமிஷனில் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி எழுப்பப்படும் குரல்களும், பல்வேறு சர்வதேச மனித உரிமை, மனிதாபிமான அமைப்புக்கள் அதற்கு கொடுக்கும் ஆதரவும் இவ் வளர்ச்சிப் போக்கையே காட்டுகின்றன. இலங்கையில் சிங்களத் தேசிய இனம், தமிழ்த் தேசிய இனம் ஆகியவை இருப்பதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் அங்கீகரித்ததானது ஏனைய அரசாங்கங்களுக்கு முன்னோடிச் செயலாக அமைந்துள்ளது.

இயங்கியல் ரீதியான இவ் வளர்ச்சிகளை முனைப்படுத்தி வரலாற்றுப் போக்கை விடுதலை எனும் இலக்கை நோக்கி நகர்த்துவது ஒருங்கிணைந்த அனைத்து தமிழ் மக்களினதும் கடமையாகின்றது.

ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு:

எரிமலை
c/o C.C.T - France
341, Rue des Pyrenees
75020 Paris.
Tel: 43 58 11 42

www.tamileelamarchive.com

# தமிழீழ விடுதலைப் போராட்டம்

## யதார்த்த நிலைமை

தமிழீழ மக்களின் 40 க்கும் மேற்பட்ட வருடகால அனுபவம், சிங்களப் பேரினவாதம் சமாதானமாகப் பிரச்சனையை எப்போதும் தீர்க்க முன்வராது என்ற உண்மையை மிக ஆணித்தரமாக உறுதிசெய்கிறது. அரச பயங்கரவாதமும், இனஅழிப்பு என்ற எல்லையை தொடுகின்ற ஒடுக்குமுறையுமே பாரிய அளவிலும், தொடர்ச்சியாகவும் எமது மண்ணில் இடம் பெற்றுவருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் சர்வதேச சட்டங்களின் விதிகளுக்கு அமைவாக ஒரு மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட 40 வருடகால கொடூர ஒடுக்குமுறை போதியதாக உள்ளது. தவிர, சமாதான முயற்சிக்கோ, உண்மையான பேச்சுவார்த்தைக்கோ சிங்கள இனவாதத்தைப் பொறுத்தவரை இடமில்லை என்ற மட்டில், இறுதி வழியாக ஆயுத நடவடிக்கை மூலம் அடக்குமுறையை அகற்றுவதும், சுதந்திரத்தை நிலைநாட்டுவதும், சர்வதேச சட்டத்திற்கு உட்பட்டதாகவும், நியாயபூர்வமானதாகவும் அமைந்துவிடுகின்றன. எமது விடுதலைப் போராட்டம் இவ்வடிப்படையிலேயே வளர்ந்துவருகின்றது. இராணுவ அடக்குமுறைக்கு எதிரான தமிழீழ மக்கள் படையின் ஆயுதம் தாங்கிய போராட்டம்; இப்போராட்டத்திற்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெறும் முயற்சி. இவ்விரண்டு விடயங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் தமிழீழ மக்கள் பெரும் தடைகளை உடைத்தெறிந்து, மிகவேகமாக இலக்கை நோக்கி முன்னேறி வருவதே யதார்த்த உண்மையாகும்.

ஆயுதப் போராட்டம், தாயக மண்ணில் தொடர்ச்சியான பல வெற்றிகளை ஈட்டிவருகின்றது. பாரிய நிலப்பரப்புக்களை தொடர்ச்சியாக, நீண்ட காலத்திற்கு தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதானது, பிரகடனப்படுத்தப்படாத வகையில் தமிழீழநாடு உருவாகி வருவதை காட்டுவதாகவே சர்வதேச சட்டவல்லுனர்கள் கணித்துள்ளனர். வடக்கில் 90% மான நிலப்பகுதியும், கிழக்கில் 50% இற்கு மேலான நிலப்பகுதியும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் இருந்து வருகின்றன. பொலிஸ் நிலையங்களும், ஆயுதப்படை முகாம்களும் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. புறம் போக்காக, விநியோகம் செய்வதற்கு கஷ்டமான, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன. தற்போது பெரும்பாலான சண்டைகள் எல்லைப் புறங்களிலேயே நடைபெற்றுவருகின்றன. எமது எல்லைகளையும், முழு நிலப்பரப்பையும், கடல் எல்லைகளையும் பாதுகாக்கக் கூடியதாக எமது ஆயுதபடைகள் முறையான, தேசிய இராணுவமாக உருப்பெற்று வருகின்றன. பல்லாயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் தமிழ்மக்கள் படையில் நாளும் இணைந்து வருகின்றனர். கனரக ஆயுதங்கள், வாகனங்கள், ஏவுகணைகள், பீரங்கிப்படகுகள் குறித்தும், விமானப்படை குறித்தும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியதும், அது நோக்கி முன்னேற வேண்டியதுமான அடுத்த கட்டம் வந்துகொண்டிருக்கின்றது.

சுய உணவுற்பத்தி, சுய சார்புப் பொருளாதாரம், எரிபொருட்கள், மின்வலு, சக்தி ஆகியவற்றை உற்பத்தி செய்தல் அல்லது மாற்றீடு காணுதல் ஆகியவை குறித்து தீவிர சிந்தனையும் அவற்றை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்குமான செயற்பாடுகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

தமிழீழ மக்கள் என்றுமே கண்டிராத இனஒடுக்குமுறையின் உச்சக்கட்டத்தை அனுபவித்து வருகின்றனர். தமிழீழ மக்களிற்கு எதிரான முழுஅளவிலான போராகவே சிங்கள அரசாங்கத்தால் இது நடாத்தப்பட்டு வருகின்றது. படுகொலைகளும், காணாமல் போதலும், குண்டுவீச்சுக்களும், பொருளாதாரத் தடையும் தமிழீழ மக்களை துன்பங்களின் எல்லைக்குத் தள்ளியபோதும், மனஉறுதி வளரப்பெற்றவர்களாகவும், தமது இலட்சியத்தில் திடசங்கற்பம் உடையவர்களாகவும் மாறுவதையே காணக்கூடியதாக உள்ளது. தமது உயிர்வாழ்தலுக்காக இறுதிவரை போராட வேண்டும் என்பதிலும், விடுதலைப் புலிகளே தமது வாழ்விற்கும், விடுதலைக்கும் உறுதியான, விட்டுக்கொடுக்காத உத்தரவாதிகள் என்பதையும், சிறீலங்கா அரசாங்கத்தோடோ, இந்தியாவின் அனு

சரணையோடோ இருக்கின்ற ஏனைய தமிழ்க் குழுக்கள் "பிணம் தின்னும் கழுகுகள்" என்பதையும் மக்கள் எப்போதும் சரியாகப் புரிந்து வைத்துள்ளனர். எதிரியுடன் சேர்ந்து, அரசபயங்கரவாதம் தமிழீழ மக்களின்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



மீது மேலும் மேலும் கட்டவிழ்த்து விடப்பட உதவி வரும் காட்டிக் கொடுப்பவர்கள்பற்றி, அவர்களால் ஏற்படும் கொடூர அழிவுகள் குறித்து, சொல்லொ ணாத் துன்பங்கள் குறித்து மக்கள் தெளிவாகவே உள்ளனர். ஒன்று திரண்ட மக்கள் சக்தியின் ஆதர வுடன் நடைபெற்றுவரும் விடுதலைப் போராட்டம் நன்கு திட்டமிடப்பட்ட அரசியல், யுத்த தந்திரோபா யத்தின் அடிப்படையில், தலைவர் பிரபாகரனின் உறுதியான, கட்டுப்பாடான, தீர்க்கதரிசனமான வழிநடத்தலில் முன்னேறிவருகின்றன.

எமது விடுதலைப் போரில் சர்வதேச ஆதரவு, அங்கீ காரம் என்பன முக்கியமான விடயங்களாகும். பல் வேறு நாடுகளில் நடைபெறும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் எமது போராட்டத்திற்கு தார்மீக ஆதரவை வழங்குகின்றன, பரஸ்பர துணைகரமாக அமைகிறன்றன. 90 ம் ஆண் டுகள் தேசிய இனங்களின் விடுதலை தசாப்தமாக அரசியல் வல்லுனர்களால் கணிக்கப்பட்டுள்ளது. ஐ.நா.சபையின் மனித உரிமைக் கமிஷனின் கூட்டத் தொடர்களில் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை குறித்து, பல்வேறு சர்வதேச மனித உரிமை அமைப் புக்கள் அறிக்கைகள் வாசித்துள்ளதும், பல்வேறு நாடுகள் விடுதலைப் புலிகளின் தலைமையோடு உத்தியோக ரீதியிலும், உத்தியோகபற்றற்ற ரீதியிலும் தொடர்புகளை ஏற்படுத்திவருவதும், அண்மையில், அவுஸ்திரேலியா இலங்கையில் தமிழ், சிங்கள தேசிய இனங்கள் உண்டென்பதை ஏற்றுக் கொண்டதும் இம்முன்னேற்றங்களையே எடுத்துக் காட்டுகின்றன. அதேவேளை புதிய நாடுகள் உருவாகுவதையும், தமிழீழ நாடு உருவாகுவதையும் தடுக்கும் சர்வதேச நாசகார சக்திகள் எமது போராட்டத்திற்கு எதிராக வும் செயற்பட்டு வருகின்றன. சிறீலங்கா அரசின் பின்னே அணிதிரண்டுள்ள இப்பிற்போக்கு, நாசகார சக்திகள் தமிழீழ உருவாக்கத்திற்கு எதிரான இரா ணுவ, பண, இராஜதந்திர உதவிகளை சிறீலங்கா விற்கு வழங்கிவந்தவண்ணமே உள்ளன. உள்நாட்டி லும், வெளிநாடுகளிலும் இச்சதி முயற்சி, துரோகக் குழுக்களின் கணிசமான உதவியுடன் முடுக்கிவிடப் பட்டுள்ளது. உள்நாட்டில் சாதி, சமய, பிரதேச, நில அடிப்படையில் தமிழீழத்தைப் பிரிப்பதும், சர்வதேச அளவில், தமிழீழக் கொள்கைக்கு எதிரான பிரச்சா ரத்தை பல்வேறு தளங்களில் மேற்கொள்வதும் இடம் பெற்றுவருகின்றன. இவ் எதிர்ப்பு அலைகளை வென்று எமது விடுதலைப் படகு இலக்குநோக்கி முன்னேறுவதை எவராலும் தடுக்கமுடியாது. ■

**இது எமது இனத்துக்கு எதிராக, எமது இனத்தை அழிக்கும் நோக்கத்து டன் நடாத்தப்படும் யுத்தம். இந்த யுத்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. இந்த யுத்தத்திலிருந்து நாம் ஒதுங்கிக் கொள்ளவும் முடியாது. இந்த யுத்தத்தை நாம் துணிவுடன் எதிர்கொள்வதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.**

**வே. பிரபாகரன்**
**தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்**

www.tamileelamarchive.com

# சமாதானத் தீர்வு சாத்தியமா?

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை சிறீலங்கா அரசாங்கம் சமாதான முறையில் அங்கீக ரிக்காது; சிங்கள, பௌத்த பேரினவாத அடக்குமு றையையே தொடர்ந்து நடைமுறைப்படுத்த முனை யும்; அச்செயற்பாட்டிற்கு வசதியாக பேச்சுவார்த்தை நாடகத்தை இடையிடையே நடித்துக் கொள்ளும் என்ற அணுகுமுறையிலேயே நாம் சமாதான முயற் சிகளை நோக்கவேண்டும். உள்நாட்டிலும், வெளி நாடுகளாலும் ஏற்படுகின்ற நெருக்கடி நிலையைத் தளர்த்த பேச்சுவார்த்தைக்கு சிறீலங்கா அரசாங்கம் தள்ளப்படலாம். அல்லது இராணுவ வெற்றியொன் றைச் சாதித்தபின் பலம் பொருந்திய நிலையில் இருந் தவாறு கண்துடைப்பாகப் பேச்சுவார்த்தையொன்றை நடத்திக் குறைந்தபட்சத் தீர்வுகளை தமிழீழ மக்கள் மீது திணிக்கவும் ஸ்ரீ லங்கா அரசாங்கம் எண்ணலாம்.

அவ்வாறு பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு சிறீ லங்கா அரசாங்கம் முன்னெச்சரிக்கையாக மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளது. இந்நிபந்தனைகள் பேச்சுவார்த்தையை தனக்குச் சாதகமான விதத்தில் நடத்தி முடிப்பதற்கு வசதியான தளத்தை அமைத்துக் கொடுக்கும் என்று சிறீலங்கா அரசாங்கம் எண்ணுகி றது.

முதல் நிபந்தனை: சட்டரீதியாக அனுமதி வழங்கப்பட் டவரைத் தவிர்ந்த ஏனையோர் ஆயுதங்களை வைத் திருத்தல்; பாவித்தல் ஆகியவற்றிற்கு எதிராகப் பிர கடனம் ஒன்றைச் செய்தல் வேண்டும் என்று கூறுகின் றது. இது சர்வதேச சட்டத்திற்கு அமைவாக நடத்தப் படும் ஆயுதப்போராட்டத்திற்கு எதிரான ஒரு பிரக டனமாக அமைகிறது. ஆயுதப் போராட்டமானது, சர்வதேச சட்டங்களின்படி அடக்குமுறைக்கு எதி ரான இறுதி வழியாகவே கடைப்பிடிக்கப்பட முடியும். இனப்படுகொலை என்ற நிலையை அடைந்துள்ள அடக்குமுறையினையும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வினையும் குறிப்பிடாமல், ஆயுதப் போராட்டத்திற்கு எதிரான பிரகடனம் ஒன்றை மேற்கொள்ளுவது சிறீலங்கா அரசாங்கத்தை ஒடுக்குமுறைக்கான பொறுப்பில் இருந்து நீக்கிவிடு வதோடு, தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை யின் அடிப்படையில் நிரந்தரத் தீர்வொன்றைக் காணவேண்டிய அவசியத்தையும் இல்லாததாக்கி விடுகின்றது. சுயநிர்ணய உரிமையுள்ள தமிழீழ மக் கள், தங்கள் பாதுகாப்பிற்காக எப்போதும் ஆயுதம் தரிக்கவோ, தங்கள் உரிமைகளை நிலைநாட்ட ஆயு தங்களைப் பயன்படுத்தவோ உரிமை உடையவர்கள் என்பதை மறுப்பதன்மூலம் ஆயுதப்படைகளை உள் ளடக்கிய சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் சட்ட உரி மையும் மறுக்கப்படுகின்றது. எனவே ஆயுதக்கையிருப் பிற்கோ, அதன் பாவனைக்கோ எதிரான பிரகடனங் களை விடுத்து, சர்வதேச சட்டங்களின் பிரகாரம் அதனை எவ்வாறு சட்டபூர்வமாக்குவது என்பதே விடுதலைப் புலிகளால் வைக்கப்படும் வாதமாகும்.

இரண்டாவது நிபந்தனை: எதிர்வரும் பேச்சுவார்த் தைகளில் தலைவர் பிரபாகரன் பங்குபற்ற வேண்டும் என்பதாகும்.

சிறீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை விடுத லைப் புலிகளை அழித்து, தமிழீழ மக்களை, அவர்க ளின் எதிர்ப்பை நசுக்கி விடுவதற்கு பேச்சுவார்த் தையை பயன்படுத்துவதுதான் நோக்கம் என்று நன் றாகத் தெரிகின்றது. விடுதலைப் புலிகளின் ஆயுதங் களைக் களைவதுதான் அரசாங்கத்தின் குறிக்கோள். பிரபாகரன் இராணுவத் தளபதி என்றதன் பேரிலும், யுத்தத்தை நடத்துவது பிரபாகரன் என்ற அடிப்படை யிலும் பிரபாகரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆயுதக்கையளிப்புத் தொடர்பாக பிரபாகரனை இணங்க வைக்க வேண்டும் என்றும், அதற்கு வேறு பிரதிநிதிகளைவிட பிரபாகரனை நேரடியாகவே உத்தரவாதியாக்க வேண்டும் என்றும் அரசாங்கம் எண்ணுகின்றது. அவ்வாறு முடியாது போனால், செயற்கையான தாக்குதல் ஒன்றை நடாத்தி பிரபாக ரனைத் தீர்த்துக்கட்டி பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவர முயலுதலே அரசின் திட்டமாகும். றோகண விஜேவீர, பியதிஸ்ச கமநாயக்கா ஆகியோர் எவ்வாறு அரசாங்கத்தால் சட்டவிரோதமாக கொன் றொழிக்கப்பட்டார்கள் என்பது சகலரும் அறிந்த விடயமாகும். பிரபாகரன் விடுதலைப் புலிகளின் தலைவர் மட்டுமல்ல, தமிழ்த் தேசிய இனத்தின் தலைவர் என்பதை அரசாங்கம் மறுக்கிறது. பிரபாக ரன் தலைமை வகிக்கும் மத்தியகுழுவே அனைத்து முடிவுகளையும் எடுக்கின்றது என்பதையும் அரசாங் கம் ஏற்றுக் கொள்ளவில்லை. விடுதலைப் புலிகளின் அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற அடிப்படையில் இராணுவ, அரசியல் செயற்பாடுகளை ஆற்றிய போதிலும், அரசியல், இராணுவம் ஒருங்கிணைக்கப் பட்ட சகல, உறுப்பினர்களும் அரசியல், இராணுவக் கடமைகளை புரிகின்ற ஓர் அமைப்பு என்பதை அறிந்

www.tamileelamarchive.com

திருப்பதாகத் தெரியவில்லை. தவிர- அரசாங்கத்து டனான பேச்சுவார்த்தையில் - யார் பங்குபற்றுவது என்பதை விடுதலைப் புலிகளின் மத்திய குழுவே தெரிவு செய்யவேண்டுமே தவிர அரசாங்கம் அல்ல. பிரபாகரனுடன், தாக்குதல் நடவடிக்கைகளை இடை நிறுத்துதல், யுத்தநிறுத்தம், இராணுவத்தினரை முகாம் களுக்குள் இருக்கச் செய்தல், காலதாமதமான ஆயு தக்கையளிப்பு, யுத்தநிறுத்தக் கண்காணிப்பு என்ற விடயங்களில் பேச்சுவார்த்தையை நடத்தி - பின்னர் - சர்வகட்சி மகாநாட்டிற்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை இட்டுச் செல்லுவதுதான் அரசாங்கத் தின் படிமுறையான திட்டமாக இருக்கின்றது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

<u>மூன்றாவது நிபந்தனை</u>: சர்வகட்சி மகாநாட்டுடன் தொடர்புடையதாக இருக்கின்றது.

சர்வகட்சி மகாநாடு என்பது, பொறுப்பைத் தட்டிக்க ழிக்கும் அரசாங்கத்தின் இன்னொரு தந்திரம். இதே தந்திரம் JVP யினால் அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட நெருக்கடியான வேளையில் கனகச்சிதமா கக் கையாளப்பட்டது. தேசிய அரசாங்கம் அமைக்கப் போவதாகவும், சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை பிரதமராக நியமிக்கப்போவ தாகவும் ஏமாற்றி, சர்வ கட்சிகளினதும் ஆதரவைப் பெற்று, பிரேமதாசா அப்போது தனது அரசாங்கத் தின் பின்னால் தற்காலிகமானதொரு பலத்தைத் திரட்டிக்கொண்டார். இப்போது விடுதலைப் புலிக ளைப் பொறுத்து அத்தந்திரம் மீண்டும் அரங்கேற்றப் படவுள்ளது. இதற்கு முக்கியமாகப் பயன்படவுள்ளவர் கள் தமிழ்த் துரோகக் குழுக்களும், முஸ்லீம் கட்சி களும் ஆகும். சர்வகட்சிகளோடும், மக்களால் தூக்கி எறியப்பட்ட துரோகத் தமிழ்க்கட்சிகளுடனும் தமிழ்த் தேசிய இயக்கமான விடுதலைப் புலிகளை இருத்தி - அவர்களைப் பலவீனமாக்குவதே அரசின் திட்டம். 90% மான தமிழ் மக்களின் ஆதரவும் விடுதலைப் புலிகளின் பின்னால் என்று அறிதியிட்டுக் கூறிய போதிலும், சர்வகட்சி மகாநாட்டில் விடுதலைப் புலிகள் தன்னந்தனியாக விடப்படுவது தவிர்க்கப்பட முடியாதது.

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத் திற்கு எதிராக அரசுடன் சேர்ந்தும், சிறீலங்காவின் ஒற்றையாட்சி முறையின்கீழ் தீர்வினைக்காணத் தீர்மானித்தும் இருக்கின்ற சந்தர்ப்பவாத, துரோகத் தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே செயற்படும் என்று நிட்சயமாகும்போது, ஏனைய முஸ்லீம், சிங்களக் கட்சிகளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

மேலும் இச்சர்வகட்சி மகாநாட்டில், ஐ.தே.கட்சியே பிரதிநிதித்துவப் படுகின்றதேயொழிய, மக்களால் தெரியப்பட்ட, பொறுப்புவாய்ந்த, சட்டரீதியான அர சாங்கம் அல்ல. எனவே அங்கு ஏதாவது தீர்மானம் எடுக்கப்பட்டால்கூட, அரசாங்கம் நிறைவேற்ற வேண் டிய அவசியம் இல்லை. அரசாங்கம் சர்வகட்சிகளின் மகாநாட்டைக் கூட்டுகின்றதோடு - அரசாங்கக் கட்சியும் அனைத்துக் கட்சிகளுடன் தானும் ஒன் றாய்க் கலந்து முழுப்பொறுப்பிலிருந்து விடுபட்டுக் கொள்கிறது. எனவே தமிழீழமக்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் விடுதலைப் புலிகளும் சிங்கள மக்க ளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கமும் பேச் சுவார்த்தையில் ஈடுபட்டு நடைபெறும் ஆயுதமுரண் பாட்டிற்கு நிரந்தரத் தீர்வுகாணும் சந்தர்ப்பம் தடுக்கப் படுகிறது. எனவே விடுதலைப் புலிகளைத் தனிமைப் படுத்துவதும் பிரச்சனைக்குத் தீர்வுகாணாமல் தட்டிக் கழித்து, பழியை விடுதலைப் புலிகளின்மேல் போடு வதுமே நோக்கமாக இருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின்போது வட்டமேசை மகாநாடு என்று, இந்தியத் தேசியக் காங்கிரஸினதும், இந்திய மக்களி னதும் பிரதிநிதியாய் இருந்த மகாத்மா காந்தியை மட்டும் இலண்டனுக்கு அழைக்கவில்லை. இந்தியா வில் இருந்து பல குட்டி மகாராஜாக்களை இந்திய மக்களின் பிரதிநிதிகளாக அழைத்து மகாத்மாகாந் தியையும் இந்தியத்தேசிய காங்கிரசையும் தனிமைப்ப டுத்தி இந்திய விடுதலையை தள்ளிப் போட்ட அன் றைய பிருத்தானிய அரசாங்கத்தின் தந்திரத்தையே - இன்று - சிறீலங்கா அரசு அணுவும் பிசகாமல் கையாள முனைகிறது. பிரித்தாளும் பிரித்தானியத் தந்திரமும், சிறீலங்கா அரசினால் பாடமாகப் படிக்கப் பட்டு முஸ்லீம் மக்களைத் தமிழ்மக்களிடம் இருந்து பிரிக்க திறம்படக் கையாளப்படுகின்றது.

அரசாங்கம் தமிழ்த்தேசியப் பிரச்சனைக்கு வைத்திருக் கும் தீர்வு என்னவெனில், பிரதேச சபைகளை அமைப்பதுதான். பிரதேச சபைகள் என்பது - உதவி அரசாங்கப் பிரிவுகளை உள்ளடக்கிய சிறிய பகுதி யாகும். இந்த அடிப்படையில், தமிழ்த் தாயக மண் ணைத் துண்டாடி ஒற்றையாட்சி முறையின்கீழ் தமிழ்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



மக்களை தனது அதிகாரப் பிடியினுள் கொண்டுவருவதுதான் நோக்கம். இதனை இராணுவப் படைப் பலத்தின் மூலம், இன அழிப்பின் மூலம், இராணுவ வெற்றி ஒன்றின் மூலம் சாதிக்க விரும்புகின்றது. இது பகற்கனவாகவே முடியும். விடுதலைப் புலிகள் இப் பேச்சுவார்த்தையை நடத்தினாலும், அது தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தான் இருக்கும். தமிழீழ மக்களின் போர்ப்பழுவைக் குறைக்கவும், சர்வதேச ஆதரவைப் பெறவும், சிறீ லங்கா அரசாங்கத்திற்கு சமாதானத் தீர்வுக்கான சந்தர்ப்பம் கொடுக்கவும், நிவாரண வேலைகளை கூடுதலாகச் செய்யவும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் பங்குபற்றலாம்; நிரந்தரத் தீர்வுக்கும், விடுதலைக்கும், சமாதானத்துக்குமான முயற்சியில் நிலைமை பாதகமாக இருப்பின் பேச்சுவார்த்தையில் பங்குபற்றாதும் விடலாம். ஆயினும், சுயநிர்ணய உரிமை வெல்லப்படும்வரை, பூரணவிடுதலை கிடைக்கும் வரை போராட்டம் தொடர்ந்து நடைபெற்றேதீரும். ■

**டயலாக் - 1**

சபலம்:- ரஞ்சன் விஜயரெட்னாவை கொழும்பில வைச்சு குண்டு வைத்துக் கொண்டது கோழைத்தனமான செயல் எண்டு பிரேமதாசாவும், E.P.D.P யும் கண்டனம் தெரிவிச்சிருக்கினமாமே...?

நளினம்:- ஆகாசத்தில இருந்து குண்டுபோட்டுச் சனத்தைக் கொல்லுறதும், அகதிமுகாம்களில இருக்கிற சனங்களை அள்ளிக்கொண்டுபோய் அரவமில்லாமல் சாம்பலாக்கிறதும் வீரத்தனமாமோ...?


**டயலாக் - 2**

சபலம்:- ஆயிரக்கணக்கான தமிழ்மக்களை கொடூரமாக கொன்று குவித்த ரஞ்சனை இனவாதியில்லை, நல்லவர் எண்டு எங்கட கொழும்புக் கோஷ்டியள் கவலை தெரிவிச்சிருக்கினம்.....

நளினம்:- 60 ஆயிரம் சிங்கள மக்களையும் கொண்டவர் தானே; ஒருவேளை அதுக்காக இருக்கும்.

சபலம்:- .....ம்.... அப்ப.. அவரை பயங்கரவாதி எண்டு சொல்லலாம்தானே..?

www.tamileelamarchive.com



## ஒரு புள்ளியை நோக்கி..... !

இரவும் பகலுமாய்
கழிந்தது
குளிர்காலப் பொழுது

மரங்கள் மீண்டும் பூத்தன

கோடையும் குளிருமாய்
விரைந்தன நாட்கள்

எல்லாமே
ஏதோவொரு மையத்தை நோக்கி
அசைகின்றன.

நேர்கோடொன்றின்
ஒரே மாதிரியான புள்ளிகளுக்கு நடுவில்
திசைகளை இழந்து பயணப்படுகிறது,
எங்கள் மனிதவாழ்வு
மாற்றங்கள் ஏதுமின்றி.

மனித வாழ்வின்
இயங்குதிசையென்பது எது?
மேற்கா? கிழக்கா?
இல்லை
இரண்டுக்கும் நடுவில் வேறொன்றா?

எதுவாயிருக்கும்?

திசைக்கு ஒன்றாய் சிறகசைத்து
இரைகள் தேடி
என்னைப் போலவே உலகை அளக்கும்
பறவைகளைப் பார்த்துக் கேட்டேன்,
"உமது வாழ்வின் மையப்புள்ளி
எங்கே உள்ளது தெரியுமா உமக்கு...?"

ஏளனமாக எனைப்பார்த்து
பதிலேதும் கூறாது போன பறவைகள்
மாலைப் பொழுதில்
மீண்டும் தமது கூடு திரும்பி
தமது வாழ்வின் இயங்கு திசைகளை
சொல்லி மறைந்தன.

மேற்கே நின்றாலும்
கிழக்கே நின்றாலும்
ஒரு
தாயின் மடியாய் நீண்டு கிடக்கும்
என்னுடைய தாய்நாடே
எங்கள்
மனிதவாழ்வின் மையப்புள்ளி
என்பது புரிந்தது எனக்கு! ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






**விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தையாவின் கிழக்கு மாகாண பயணத்தின் போது, அவரோடு அவரது பயணத்தில் பங்கெடுத்துக் கொண்ட பத்திரிகையாளர் ஒருவரின் பயணக்கட்டுரையில் இருந்து......**

திரு. மாத்தையா அவர்கள் அகதிகளிடம் விடைபெற்று வாகனத்தில் ஏறினார். செல்லும் வழியெங்கும் சிறு குடில்களை அமைத்து ஏராளமான அகதிகள் தங்கியிருப்பது தெரிந்தது. வாகரையை அடைந்ததும் மதிய உணவுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்தில் தங்கினோம். அப்போது ஒரு செய்தி வந்தது; யாழ்கோட்டையை போராளிகள் கைப்பற்றிவிட்டார்கள்என்று. அன்று திலீபனின் நினைவுநாளை முன்னிட்டு சில இடங்களில் நினைவுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. மட்டக்களப்பு நகர்முழுவதும் விழாக்கோலம் பூணுகிறது. மக்கள் பட்டாசு கொழுத்தி தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றார்கள் என்றும் செய்தி வந்தது. மாத்தையாவை ஊர்மக்கள் பலரும், மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவிற்கு பொறுப்பாக இருக்கும் ஜெயாவும் வந்து சந்தித்துச் சென்றனர்.

அங்கிருந்து நாம் நீண்டதூரப் பிரயாணத்தின்பின் ஒரு முகாமைச் சென்றடைந்தோம். 28.09.90 வரை இந்த முகாமிலேயே தங்கினோம். 28.09.90 மாலை அந்த முகாமில் இருந்து புறப்பட்டோம். எம்மை அழைத்துச் செல்ல மட்டக்களப்புத் தளபதி கருணா புறப்பட்டு வந்தார். வழியில் எம்மைச் சந்தித்து அழைத்துச் சென்றார். ஒரு மணித்தியாலம் நடக்க வேண்டியிருந்தது. வயல்வெளிகளுக்கூடாக நடந்து சென்றோம். நன்றாக விளைந்திருந்த வயலை யானை அழித்திருந்தது. அறுவடை செய்யாமல் இப்படி அழிந்திருக்கும் வயல்வெளிகளைப் பார்க்கும்போது வயிறுபற்றி எரிந்தது. எனக்கே இப்படி என்றால் சொந்தக்காரனுக்கு எப்படி இருக்கும். ஏன் இந்த வயல்கள் அறுவடை செய்யப்படவில்லை என்று கேட்டேன். சுதந்திரமாக மனிதர்கள் நடமாட முடியாத நிலையில் வயல்கள் அறுவடை செய்யப்படவில்லை. இராணுவத்திற்குப் பயந்து வயல்ப்பக்கம் மக்கள் செல்லவில்லை என்றார். இராணுவத்துடனான மோதல்கள் தொடருகின்றனவா என்று கேட்டேன். என்ன நடந்தாலும் அதுமட்டும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். கடந்த 22 ம் திகதி கூட சிங்கபுர முகாமில் இருந்து கண்டக்காடு முகாமுக்கு சென்ற இராணுவத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். தொலைத் தொடர்புச் சாதனம் ஒன்றும் 10 றைபிள்களும் உருப்படியாகக் கிடைத்தன என்றார்.

கண்டக்காடு பொலநறுவை மாவட்டத்தில் அல்லவா இருக்கிறது. நானும் தான் அடிக்கடி கேள்விப்படுகின்றேன். அநுராதபுரத்தில் தாக்குதல் நடக்கிறது, பொலநறுவை மாவட்டத்தில் தாக்குதல் நடக்கிறது என்று, பதுமனும் நீங்களும் ஏதோ தீர்மானம் எடுத்திருக்கிறீர்கள் போல இருக்கிறது. நான் அறிந்தவரை வடக்கு கிழக்கு மாகாணங்கள்தான் தமிழீழம் என்று எண்ணியிருக்கின்றேன், நீங்களோ பொலநறுவை மாவட்டத்திலும், அநுராதபுரம் மாவட்டத்திலும் தாக்குதல் நடாத்துகிறீர்கள். ஈரோசுக்கு பதுளை தேவைப்பட்டதுபோல உங்களுக்கு இந்த இரண்டு மாவட்டங்களும் தேவைப்படுகின்றதோ என்றேன். சிரித்தார்.

"அப்படியில்லை. இராணுவமோ, குடியேற்றமோ நாம் அதைத் தேடிப் போகாவிட்டால் அவை நம்மைத் தேடிவரும். தமிழீழம் எமது சொந்தநாடு, எமது நாட்டிற்குள் சிங்களவன் அத்துமீறும்போது நாமும் எல்லை தாண்டுவது தவிர்க்க முடியாததாகின்றது. அதைவிட கண்டக்காட்டுப் பகுதி தமிழரின் பூர்வீக நிலம்தான். பொலநறுவையில் கூட இந்து ஆலயங்கள் இருந்திருக்கின்றன. கண்டக்காட்டுப் பகுதியை அண்டி சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதால் இன்று நீங்கள் அதை சிங்களவருடைய பிரதேசம் என்று எண்ணுகிறீர்கள். காலப்போக்கில் மொறவேவா, சாலியபுர என்பதெல்லாம் சிங்களக் கிராமங்கள் என்று வேறிடத்தில் உள்ள தமிழர்கள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சொல்லக்கூடும். ஏனெனில் அந்தப் பெயர்கள் பழக்கத்தில் வந்துவிடும். இராணுவத்தின் கொடுமைகளால் அந்த இடத்திற்கு சொந்தமான மக்கள் வேறு இடங்களில் குடியமரும் போது இப்படியான நிலை தோன்றும்தான்" என்றார்.

பொதுமக்களின் நிலை என்னமாதிரி என்று கேட்டார் மாத்தையா. நாளாந்தம் சராசரியாக 20, 30 என்று செத்துக்கொண்டே இருந்தபடியால் அகதி முகாம் வாழ்க்கை வாழ்ந்து நாளாந்தம் அழிவதைவிட முகாம்களைவிட்டு வெளியேறி அவரவர்களுக்கு வசதியான இடங்களில் குடியமருங்கள் என்று சொல்லிவிட்டோம் என்றார். இவ்வளவு மக்களும் முகாம்களைவிட்டு வந்தால் அவர்களால் சமாளிக்க முடியுமா? என்று கேட்டேன். "வேறென்ன வழி. முஸ்லிம் ஊர்காவற்படையின் கொடுமை அதிகரித்து வருகிறது. மக்களை வெட்டிக் கொல்கிறார்கள். பெண்களைக் கற்பழிக்கிறார்கள். கற்பழிக்கப்படும் பெண்கள் உயிரோடு விடப்படுவதில்லை. இவ்வளவு காலமும் கலவரம் நடந்ததுதான். தமிழ்ப் பெண்களைக் கற்பழிப்பதும் கொலை செய்வதும் இப்போதுதான் ஆரம்பித்துள்ளது. அவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள். இனி நாம் என்ன செய்யவேண்டும் என்பதுதான் பிரச்சனை. அதற்கு முடிவெடுத்தாக வேண்டும்" என்றார். இயக்கத்தில் நிறைய முஸ்லிம் இளைஞர்கள் இருந்தார்களே! அவர்கள் இது தொடர்பாக என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள்? என்றேன். "இயக்கத்தில் இருந்தவர்கள் இருவகை, ஒரு சாரார் வேண்டுமென்றே ஊடுருவியவர்கள். அவர்கள் சண்டை தொடங்கியதுமே ஆயுதங்களுடன் ஓடிவிட்டார்கள். அவர்கள்தான் இன்று தமிழரைக் கொல்வதில் தீவிரமாயிருக்கிறார்கள். அடுத்தவர்கள் விசுவாசமாகவே இயக்கத்துடன் இருந்தவர்கள். இந்தச் சண்டையில் கூட இராணுவத்துடன் மோதி உயிரிழந்துள்ளார்கள். ஓட்டமாவடியில் நிகழ்ந்த தாக்குதல், களுவாஞ்சிக்குடியில் நிகழ்ந்த தாக்குதல் எல்லாவற்றிலும் முஸ்லிம் போராளிகள் களத்தில் இறந்துள்ளார்கள். இராணுவம் பிரதான பாதையினுள் நுழையவிருந்த சமயத்தில் தான் ஜெட் வேகத்தில் நிலைமை மாறியது என்றார். "நிலைமைக்கேற்ற மாதிரி மாறிவிட்டார்கள் என்று கருதுகிறீர்களா? " என்று கேட்டேன். "இல்லை, ஏற்கனவே வகுத்த திட்டம் செயற்படத் தொடங்கியது" என்றார். "என்ன அது?" என்றேன். "எல்லாக் கிராமங்களிலும் இருந்த பள்ளிவாசல்கள் ஓரே நாளில் இயக்கத்தில் இருந்த முஸ்லிம் இளைஞர்களைக் கூப்பிட்டுக் கதைத்தன. அதைத் தொடர்ந்து அனைவரும் உடனே விலகிவிட்டார்கள். இதன் பின்னணி மிகப் பயங்கரமானது" என்றார். என்ன அது? என்றேன். ■

...உண்மைகள் தொடரும்....

## உங்களின் கவனத்திற்கு ...

**கருத்தோட்டமுள்ள, ஆரோக்கியமான கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.**

**உங்கள் ஆக்கங்கள் ஆசிரியர் குழுவின் ஆய்விற்கு உட்படுத்தப்படும்.**

**"கேள்வி பதில்" பகுதிக்கான கேள்விகள் மாதத்தின் நடுப்பகுதிக்குமுன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

**"எரிமலை" இதழ் தொடர்பான உங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.**

*** உங்கள் பத்திரிகையை நெறிப்படுத்த வேண்டிய கடமை உங்களதே. ***

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





## இளைய பூக்களே!

ஈழம் நோக்கிய
இறுதிப் பயணத்தில்
நாளும் பூக்கின்ற
இளைய மலர்களே!
நேற்று,
அம்மாவின் அரவணைப்பில்
படுத்துறங்க,
சின்னத் தங்கையுடன் சண்டையிட்டு
வென்று மகிழ்ந்தவர்கள்;

இன்று,
சுதந்திரத்தின் சுகம்காண
தொடுக்கின்றீர் ஆக்ரோஷப்போர்.
தமிழ்ச் சிறுவனைக் கண்டாலும்,
சிந்தை கலங்குது சிங்கள இராணுவம்.
இப்படி ஓர் நிலை
எப்படி வந்தது?

மணல் வீடு கட்டிவிளையாட
சிறு தடிகள், இலைகள்
சுமக்கும் உங்கள் தோள்களில்
றொக்கட் லோஞ்சர்களா...?
கல்லெடுத்து எறிந்து விளையாடும்
உங்கள் பூவிதழ் கரங்களில்
பளுவான ஆயுதங்களா...?
எப்படி முடிகிறது...?

என்னுள் எழுகிறது,
இயல்பான கேள்வி.
அந்தோ! நீங்கள்,
அந்த, எதிரிப்படையின்
பலமான முகாமை
சிதறடித்து......
வெற்றி கொண்டு மீண்டபோது....

எனக்குப் புரிந்தது;
திடமான வீரனை தீர்மானிப்பது
வயதல்ல, நிட்சயமாக வயதல்ல;
அவனுள் உறைந்து கிடக்கும்
இலட்சிய வேட்கையும்
மன உறுதியும்தான்.

- மாணி. நாகேஷ். -

www.tamileelamarchive.com



# மலையகத் தமிழர்

## ஒரு நிதர்சனப் பார்வை

அழகு மிளிர்ந்த மலைச்சிகரங்கள், பசுமையான தேயிலைச்செடிகள், வளைந்து செல்லும் வீதிகள், அருவிகள், ஆங்காங்கே நிமிர்ந்து நிற்கும் தேயிலைத் தொழிற்சாலைகள், தோட்டங்களின் மத்தியில் அழ குடன் எழுந்து நிற்கும் பங்களாக்கள்....., இவை மலையகத்தின் எழில் தோற்றம்! ஆனால் ....., அந்த எழில் தோற்றத்திற்குள் மறைக்கப்பட்டுக் கிடக்கும் இலட்சக் கணக்கான தோட்டத் தொழிலாளர்களது உள்ளக் குமுறல்கள், ஏக்கங்கள், ஈனக்குரல்கள் வெளியில் கேட்பதில்லை. அவ்வப்பபோது அந்த மக்களிடமிருந்து எழுகின்ற சிறு எழுச்சிகளும் அதி காரக் கரங்களினால் அடக்கப்பட்டு விடுகின்றன.

" நாம் உழைப்பதற்கும் இறப்பதற்கும் மட்டுமே பிறந் தவர்கள், அனுபவிப்பதற்காக அல்ல"

ஒரு தோட்டத் தொழிலாளியின் கல்லறையில் எழு தப்பட்டிருக்கும் வாசகம்தான் அது. அந்தத் தொழி லாளர் வர்க்கத்தின் துயரம் தோய்ந்த வாழ்க்கையை விபரிக்க மேலுள்ள வாசகமே போதுமானது.

காலனித்துவ ஆட்சிக் காலகட்டத்தில் 1828ம் ஆண்டு தொடக்கம் 1931ம் ஆண்டுவரை தென்னிந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்டவர்களே இந்த தோட்டத் தொழிலாளர்கள். வெறும் மலை சார்ந்த காட்டுப்பகு திகளாக இருந்த இலங்கையின் மத்திய பகுதிகளை வனப்பு மிகுந்த சோலைகளாக மாற்றி தங்கள் வியர் வையையும் இரத்தத்தையும் சிந்தி, தேயிலை, ரப்பர், கோப்பிப் பயிர்களை வளர்த்து இலங்கைக்கு பெரும் பங்கு அந்நிய செலாவணியை ஈட்டிக்கொடுத்து வருகின்ற அந்த மக்கள் இன்றுவரைக்கும் அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டு ஆட்சியாளர்களினால் நாயிலும் கேவலமாகவே நடத்தப்பட்டு வருகின்றனர். இன்று வரைக்கும் தமது அன்றாட வாழ்க்கைக்கு தோட்டத் தொழிலையே நம்பியிருக்கும் ஒரு தனித் துவமான சமூகமாக இவர்கள் காணப்படுகின்றனர். இன்று மலையக மக்கள் முன் விரிந்து கிடக்கும் பாரிய பிரச்சனையாக அந்த மக்களது அடிப்படைத் தேவைகளே உள்ளன. குறிப்பாக மலையகத் தோட் டங்களை நிர்வகிப்பதில் அரசுசார்பாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் அரச பெருந்தோட் டக் கூட்டுத்தாபனமும் இயங்கி வருகின்றன. இதை விட பெருந்தொகையான தனியாருக்குச் சொந்த மான தோட்டங்களும் உள்ளன.இன்றும்கூட இங்கு வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானதாகவே உள்ளது. தொழிலாளர் சார்பான அனைத்துச் சட்டங்களும் இங்கு ஏட்டுச் சுரக்காய் ஆகவே காணப்படுகின்றன. தோட்டத் துரைமார்களின் சர்வாதிகாரமே தாண்டவமாடுகிறது.

இந்தத் தனியார் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அவர்களது சம்பளம், ஊழியர் சேம லாப நிதி போன்றவை சரியான முறையில் கொடுக்கப்படுவதில்லை. அத்துடன் இந்த மக்களது சுகாதாரம், கல்வி, வீட்டு வசதி என்பன மிகவும் கீழ்த்தரமான நிலையிலேயே காணப்படுகின்றன. நூறு வருடங்களைக் கடந்து விட்ட, ஆங்கிலேயர் காலத் தில் கட்டப்பட்ட லயங்களிலேயே பல தொழிலாளர் கள் இன்றும் வாழ்க்கை நடத்துகின்றனர். வருடாவ ருடம் இலட்சம் வீடுகளைக் கட்டி தன்மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் அரசு அந்த வீடுகளில் ஒரு வீட்டைத் தானும் இந்த மலையக மக்களுக்கு கொடுத்ததா என்பது கேள்விக்குறியே. இன்றைய நவீன காலத்தி லும் நாள் முழுக்க உழைக்கின்ற ஒரு மலையகத் தொழிலாளி தன் முழுக்குடும்பத்துடன் 10 - 12 சதுர அடி விஸ்தீரணமுள்ள லயம் அறையிலேயே வாழ்கி றான் என்றால்.... மலைய மக்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாக சொல்லிக் கொள்ளும் சகல அமைப்புக் களும் வெட்கப்பட வேண்டியதொன்றாகும்.

www.tamileelamarchive.com

**யு. என். பி ஆட்சியைக் காப்பாற்ற தொண்டமான் தன் மக்களைப் பயன் படுத்தினாரேயன்றி அந்த மக்களின் வாழ்க்கை நிலைப்பற்றி சிந்திக்கத் தலைப்படவில்லை.**

மலையக மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதான கட்சித் தலைமைகள் அந்த மக்களுக்கான அடிப்படை உரிமைகளைத்தானும் பெற்றுக் கொடுக்காமல் ஆட்சித் தலைமைகளுடன் கைகோர்த்து நின்று காட்டிக் கொடுப்புகளில் ஈடுபட்டுள்ளன. குறிப்பாக மலையக மக்களின் தனித்துவத் தலைவன் என்று சொல்லிக் கொள்ளும் தொண்டைமான் ஆளும் கட்சியுடன் இணைந்திருந்த கால கட்டங்களிலேயே சிங்களப் பேரினவாதத்தால் கடந்த 1977, 1981, 1983, 1984, 1986ம் ஆண்டுகாலப் பகுதிகளில் மலையக மக்கள் மிகக் கொடூரமாகத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். மலையகப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. யு.என்.பி ஆட்சியைக் காப்பாற்ற தொண்டமான் தன் மக்களை பயன்படுத்தினாரேயன்றி அந்த மக்களின் வாழ்க்கை நிலைபற்றி சிந்திக்கத் தலைப்படவில்லை. மலையகத் தொழிற் சங்கங்களும் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஒன்றுபடாமல் தங்களுக்குள் பிளவுபட்டு நின்று வெறுமனே பாட்டாளி வர்க்கக் கோஷங்களுடன் நடைமுறைக்கு ஒவ்வாத நிலையால் வெற்றுத் தத்துவங்களைச் சுமந்து மக்கள் மத்தியில் வலம் வந்தார்களேயன்றி நடைமுறைக்குச் சாத்தியமான இயங்கியல் நோக்கில் அந்த மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க முயலவில்லை.

இன்றும் கூட மலையக மக்கள் சரியான வழிகாட்டுதல் இன்றி, தலைமையின்றி நட்டாற்றில் தவிக்கவிடப்பட்டிருக்கின்றார்கள். தங்கள் உரிமைகளுக்கான இதய சுத்தியுடன் ஒன்றுப் பட்டுப் போராடக்ககூடிய அம்மக்களிடையே இருந்து எழக்கூடிய பலம் பொருந்திய அமைப்பு ஒன்றிற்காக மலையக மக்கள் ஏங்குகின்றார்கள்.... கிடைக்குமா.....?

தற்போது மலையக மக்கள் ஒரு தேர்தலை எதிர் நோக்கிக் காத்திருக்கிறார்கள். தேர்தல் அந்த மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து விடாது என்றாலும் கூட அவர்களின் தனித்துவத்தையும், வலிமையையும் வெளிக்காட்டுவதற்கு இதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தமுடியும். இதற்காக மலையக மக்கள் மீது உண்மையான ஈடுபாடும், அக்கறையும் கொண்ட மலையக அமைப்புகள், சமூக ஸ்தாபனங்கள் ஒன்றுபட்டு ஒருகொடியின் கீழ் செயற்படுவதன் மூலமே இதனைச் சாதிக்கமுடியும்.


அத்துடன் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் அமைந்த புதிய தேர்தல் முறையானது பெரும்பாலான படிப்பறிவில்லாத மக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்த வாய்ப்பிருக்கின்றது. அத்துடன் சிங்களக் கட்சிகளுடன் தேர்தல் கூட்டு என்ற சதியும் மலையக மக்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 1989ம் ஆண்டு பொதுத் தேர்தல் இதற்குச் சான்றாக அமைகிறது. இந்தியத் தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டதன் விளைவாக தாம் பெரும்பான்மையாக இருந்த மலையகத் தொகுதிகளில் ஒன்றில்தானும் தமிழ்ப்பிரதிநிதிகளை தெரிவு செய்ய முடியாமற் போய்விட்டது. இனிவரும் காலங்களில் மலையக மக்கள் ஏமாற்றப்படாமல் மக்களைத் தயார் செய்ய வேண்டியது அம்மக்களின் நலன்களில் அக்கறை கொண்ட அனைவரதும் கடமையாகின்றது.

அடுத்ததாக முந்தைய தமிழீழத் தலைமைத்துவங்கள் கடந்த காலங்களில் மலையக மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு உறுதியான ஆதரவைக் கொடுக்கவில்லை என்றே கூறவேண்டும். சிங்கள அரசு தமிழீழ மக்களையும், மலையக மக்களையும் ஒன்றுபட விடாமல் தடுத்து வந்தது. இந்த வகையில் தமிழீழ தேசிய விடுதலைப் போரின் துரோகக் குழுக்கள் சிலவும் மலையக மக்கள் முன் தேர்தல் களமேற இருப்பது மிகுந்த கேலிக்குரியதாகும். சொந்த மக்களையே கொன்று குவித்து எதிரிப்படைகளின் ஏவல்நாய்களாகப் பணிபுரியும் துரோகக் கும்பல்கள் எந்த முகத்துடன் மலையக மக்கள் முன் போயிருக்கின்றார்கள் என்பது புரியவில்லை. மலையக மக்கள் இந்தப் பச்சோந்திகளை இனங்கண்டு தமது வாக்குச்சீட்டுகளில் இவர்களுக்கு வேட்டு வைப்பார்கள் என்றே எதிர் பார்க்கின்றோம்.

கடந்த 21.05.90 இல் மலையக மக்களுக்காக தமிழீழம் முழுவதும் இயங்காமல் நின்றது. தமிழீழ வரலாற்றிலேயே முதன் முதலாக மலையக மக்களுக்காக நடாத்தப்பட்ட பாரிய வேலை நிறுத்தம் இதுவாகும். ஸ்ரீ லங்கா அரசு ஒரு இலட்சம் மலையக மக்களை நாடுகடத்த முற்பட்டபோதே விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சி மேற்படி ஹர்த்தாலை ஒழுங்கு செய்து நடத்தியதுடன் அப்போது ஸ்ரீ லங்கா அரசுடன் நடந்து கொண்டிருந்த பேச்சுவார்த்தையும் தடைப்படலாம் என எச்சரிக்கை விடுத்தது. இதன் மூலம் மலையக மக்கள் மீது தமக்கிருக்கும் ஈடுபாட்டினை விடுதலைப் புலிகள் தெளிவாக்கி இருக்கின்றார்கள். மலையக மக்களின் பிரச்சனைகளை உன்னிப்பாக அவதானித்துவரும் விடுதலைப் புலிகள் அந்த மக்களின் உரிமைப் போருக்கு தம்மால் முடிந்த ஆதரவு அளிப்பார்கள் என்றே நாம் எதிர்பார்க்கலாம்.

www.tamileelamarchive.com

மலையக மக்கள் உருவாக்கிய மண் அவர்களுக்கே சொந்தம். அந்த மக்கள் தாம் எதிர் நோக்கும் பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளை அவர்களே தீர்மானிக்க வேண்டும். அந்த வகையில் மலையக மக்கள் முன்னெடுக்கின்ற எந்தவொரு நேர்த்தியான போராட்டத்திற்கும் ஆதரவளிக்க வேண்டியது தமிழீழ மக்களின் கடமையாகின்றது. அத்துடன் தமிழ் ஈழத்தினை நோக்கிவரும் மலையகத் தமிழர்களையும் அன்புடன் வரவேற்று அவர்களுக்கு புதிய வாழ்வு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதும் எமது கட்டாய பணியாகின்றது. ■



" துவண்டு போதல் "

வில்கெல்ம் லெஃம்புறுக் எனும் ஜேர்மனிய சிற்பியால் வடிக்கப்பட்ட பித்தளைச்சிற்பம், பசியாலும், கொடுமையாலும் நொந்துபோன மனிதனைச் சித்தரிப்பது. பேர்லின் தேசிய அருங்காட்சிப் பொருள் அரங்கில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஸ்ரீ லங்காவின் பெருந் தோட்டத் துறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜயரெட்னா கொல்லப்பட்டார். கொழும்பில் மிகவும் பாதுகாப்போடு உலாவி வந்த சிறிலங்கா அரசின் அதிமுக்கியமான அமைச்சராக கருதப்படுகின்ற ரஞ்சன் கொல்லப் பட்டது, அரசிற்கும், இராணுவத்திற்கும் பெரு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

கொழும்பில், ஹவ்லொக் வீதியில் 02.03.91 அன்று காலை 8.30 மணிக்கு அலுவலகம் செல்லும் வழியில் அமைச்சர் கொல்லப்பட்டார். தெருவின் மருங்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் நிரப்பிவைக்கப் பட்ட குண்டு 'ரிமோட்" (REMOTE) கருவிமூலம் வெடிக்க வைக்கப்பட்டது. அந்தப் பகுதியையே உலுக்கிக் கொண்டு எழுந்த சத்தம் 15 மைல்களுக்கு அப்பாலும் கேட்டதாக அறியப்படுகின்றது. குண்டு வெடிப்பால் அமைச்சரின்கார் சுக்குநூறாக சிதறியது. பாதுகாப்பு அமைச்சருக்கு பாதுகாப்பாக வந்த கமாண்டோக்களும் சிதறுண்டனர். அமைச்சரின் உடல் இறுதிவரை அடையாளம் காணப்படவில்லை. 20 ற்கு மேற்பட்ட வாகனங்கள் சேதமடைந்தன. வீடுகள், கடைகள் என்பன சேதமடைந்தன. அந்தப்பகுதியே அடையாளம் காண முடியாதவாறு சிதைந்து கிடந்தது. கொழும்பில் நடைபெற்ற மிக சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பு இது என இராணுவ நிபணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இக் குண்டு வெடிப்பிற்கு யார் பொறுப்பு என்ற கேள்வி பெரிதாய் எழுந்து நிற்கின்றது. J.V.P யினரா அல்லது அண்மையில் இவரால் தண்டிக்கப்பட்ட சர்வதேசக் கடத்தல் கும்பலா அல்லது விடுதலைப் புலிகளா?


தமது அமைப்பின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு பொறுப்பு வகித்தவர் என்ற வகையிலே பழிவாங்கும் நடவடிக்கையாக J.V.P யினர் இதை செய்திருக்கலாம் என்ற ஊகம் எழுப்பப்படுகின்றது.

J.V.P என்ற சிங்களத் தீவிரவாதிகளை, 60000 சிங்கள இளைஞர்களையும், யுவதிகளையும் கொன்றொழித்ததன் மூலம் அடக்கியவர் என்றமுறையில் விஜயரட்னாவிற்கு அரசமட்டத்தில் உயர்ந்த கௌரவம் பேணப்பட்டது. அதேவேளை சிங்கள மக்களின் பாரிய எதிர்ப்பையும் விஜயரெட்னா எதிர்நோக்கவேண்டியிருந்தது.

இதேவேளை கொழும்பில் இயங்கிவந்த சூதாட்டக் கழகங்களின் வெளிநாட்டைச் சேர்ந்த உரிமையாளர்கள் மீது அமைச்சர் அண்மையில் துணிகரமான முறையில் நடவடிக்கை எடுத்தார். இதன் எதிரொலியாக, இக்கொலை இடம்பெற்றிருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர்.

# ரஞ்சன் விஜயரட்னா கொழும்பில் கொலை

## நாட்டைக் குலுக்கிய குண்டு வெடிப்பு




THE SUNDAY OBSERVER பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளக்கப்படம்.

www.tamileelamarchive.com

தமிழ்மக்கள் மீது இதுகாலவரை நடந்திராத படு கொலைத் தீர்வுகளை கண்மூடித்தன மாக நடத்தி யும், மலம் நிரப்பப் பட்ட பீப்பாக் குண்டுகளையும், நேபாம் குண்டுகளையும் வீசி மனித நாகரீகத்திற்கு சவால் விடும் வகையிலே தமிழின அழிப்பை சிறீ லங்கா இனவாத அரசு தொடர்ந்து மேற்கொண்டும் வருகின் றது. சிறீலங்காவின் இத்தகு இனவாதத்திற்கு பதிலடி கொடுக்கின்ற விதத்திலே இத்தாக்குதலை விடுதலைப் புலிகள் செய்திருக்கக்கூடும் என்றும் ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியினுள்ளே எழுந்துள்ள மோச மான முரண்பாடுகள், பதவிவெறிகள், வஞ்சம் தீர்க் கும் தன்மைகள், ஐக்கியமின்மை போன்றவையும் இக்கொலைக்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும் என்றும் சிலர் ஊகிக்கின்றனர்.

எது எப்படியிருப்பினும் மிக நுணுக்கமாக, நவீன முறையினைப் பயன்படுத்தி அசாத்தியத் திறமையுடன் மேற்கொள்ளப்பட்ட இக் குண்டுவெடிப்பினை விடு தலைப் புலிகளைத் தவிர யாரும் மேற்கொண்டிருக்க முடியாது என்பதே இராணுவ நிபுணர்களின் கருத் தாகும். உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள இராணுவ அவதானிகளும் இச்சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் மீதே ஐயம் கொண்டுள்ளனர். இருப்பினும் இச்சம்பவம் தொடர்பாக எவரும் உரி மைகோரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முரட்டுத்தனமான போக்கும், எடுத்தெறிந்து பேசு கின்ற தன்மையும், எதிர்தரப்பினரை கேலி செய்து கொச்சைப்படுத்தி கருத்துவெளியிடும் பண்பும், இவ ரது பொறுப்பில் இருந்த அரசபடைகளின் கொடூர மான செயற்பாடுகளும் சிக்கலான அரசியல், இரா ணுவ சூழ்நிலையில் தத்தளிக்கும் அரசிற்கு தேவை யானவையாக இருந்தமையால், முரட்டுத்தனமான வீரர் என்ற பெயரை சிங்கள ஆட்சியாளர்களிடத்தும், இராணுவத்தினரிடத்தும் இவரால் பெறமுடிந்தது. இந்த நடைமுறைகளால் குறுகிய காலத்திலேயே அரசில் பிரேமதாசாவிற்கு அடுத்ததாக இரண்டாவது பலம் வாய்ந்தவராக தன்னை உயர்த்திக்கொண்டார்.

பெருந்தோட்ட முதலாளியான விஜயரெட்னா ஐ.- தே.கட்சியின் நீண்டகால உறுப்பினர். ஐ.தே. கட்சி யில் முக்கிய பொறுப்பினை ஏற்று இயங்கிவந்த இவர், 1987 ம் ஆண்டு ஐ.தே.கட்சியின் தலைவர் கார்சா அபேரத்ன J.V.P யினரால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, ஐ.தே.கட்சியின் தலைவர் பதவியை பொறுப்பேற்றுக்கொண்டார்.

1988 ம் ஆண்டு ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் J.V.P யினரால் கொல்லப்பட்ட பின்னர், அப்பதவி யினை விஜயரெட்னா ஏற்றுக்கொண்டார்.

1989 ம் ஆண்டு தேசியப்பட்டியலின் அடிப்படையில், ஐ.தே.கட்சியால் பாராளுமன்ற உறுப்பினராக்கப்பட் டார். பின்னர் அமைச்சர் ஆக்கப்பட்டார். விஜயரெட் னாவின் இத் துரிதவளர்ச்சிக்கு அவர் ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரியவர் என்பதுடன், பிரேமதாசாவின் அரசியல் சூதுகளிற்கு ஏற்ப பொருத்தமாக செயற்படக் கூடியவர் என்பதும் முக்கிய காரணங்களாகும். J.V.P என்றாலும், ஏனைய சிங்கள அரசியல்வாதிகள் என் றாலும் தனக்குவிரும்பாத நபர்களை, கூட்டத்தை ஒழித்துக்கட்டும் பிமேதாசாவின் எண்ணத்தை தன் பொறுப்பில் ஏற்று செயற் பட்டவர் விஜயரெட்னா.

J.V.P யை ஒழித்துக் கட்டுவேன் என்று சவால்விட்டு, அதில் வெற்றிபெற்றவர் என்ற பெயரும் விஜயரெட் னாவிற்கு உண்டு. இந்தக் கர்வம் விடுதலைப் புலிகள் மீதான தப்புக்கணக்கிற்கு ஒருவேளை வழிவகுத்திருக் கக்கூடும்.

1990 யூன் 11 இற்குப் பின்னர் சிறீலங்காப் படையின ருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் கள் ஆரம்பித்த பின்னர் அடிக்கடி மூக்குடைபட்டவர் அமைச்சர். விடுதலைப் புலிகள் குறித்து தவறான மதிப்பீடுகளும், தவறான செயற்பாடுகளும் அவருக்கு அடிக்கடி தோல்விகளைப் பெற்றுத்தந்திருக்கின்றன. விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல், இன்னும் ஆறு மாதத்திற்குள் விடுதலைப் புலிகளை ஒழித்துவிடுவேன் என 1991ம் ஆண்டு தை மாதம் மீண்டும் அவர் சவால் விட்டார். எனினும் மீண்டும் அவர் சவால் விடமுடியாததபடி அவரது கதை முடிந்துவிட்டது.

சிங்களப் பேரினவாதத்தின் பிரதிநிதியாய், தமிழ்மண் மீதான, தமிழ்மக்கள் மீதான காட்டுமிராண்டித்தன மான இராணுவ வன்முறைகளின் நெறியாளராக செயற்பட்ட விஜயரெட்னா கொல்லப்பட்டது தமிழ்ப் பொதுமக்களை பொறுத்தவரை மகிழ்ச்சிக்குரிய சம்பவமாகவே உள்ளது.

விஜயரெட்னா மீதான இத்தாக்குதல் சிங்களப் பேரினவாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரப் போவதில்லை என்றபோதிலும், கொழும்பில் பாது காப்பாக இருந்துகொண்டு பயங்கரவாதத்தில் ஈடுப டும் அரசியல் தலைமைகளுக்கு இது மரணஅடி என்பது மறுக்க முடியாத உண்மை. அதேவேளை சிங்களத் தலைமைகள் குழப்பத்துடன் கிலிகொள்ள ஆரம்பித்துள்ளன என்பதும் அவர்களது தற்போதைய நடவடிக்கைகள் மூலம் அறியக்கூடியதாய் உள்ளது ■

www.tamileelamarchive.com

# அட்டகாசங்கள்



* கிழக்கில் 10 நாட்களுக்குள் சகஜ நிலையை ஏற்படுத்துவோம்.
தினபதி03.07.90.

* இம்முறை புலிகள் தப்பியோட முடியாது. நாம் கரையோரப் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளோம். அதேபோல் இந்தியாவும் கடல் கண்காணிப்பை கவனமாகப் பேணிக்கொண்டு வருகின்றது. தென்பகுதியில் J.V.P.யினர் ஒழிக்கப்பட்டது போல் வடக்குக்கிழக்கில் புலிகளும் ஒழித்துக்கட்டப்படுவர். அங்கு சட்டமும் ஒழுங்கும் கூடியவிரைவில் நிலை நிறுத்தப்படும்.
தினபதி 22.06.90.

* புலிகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நேரம்வந்துவிட்டது. புலிகளின் கழுத்தை நெரிக்கும்படி பாதுகாப்புப் படைகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.
தினபதி 13.06.90.

* வடக்குக்கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு புலிகள் இயக்கத்தி னரை அடியோடு ஒழிப்பதே சரியான வழி. அதுவே அரசின் நிலைப்பாடாகும்.
தினபதி 13.06.90.

* கிழக்குமாகாணத்தில் நிலைமைகள் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் இருந்து புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளனர்.
தினபதி 06.07.90

* கிழக்குமாகாணத்தில் புலிகளை ஒழித்துக்கட்டிய பாதுகாப்புப்படையினர் சிலநாட்கள் ஓய்வுக்குப்பின்னர் வடக்கே அனுப்பப்பட்டுள்ளனர். இனி வடக்கில் கூடுதல் நடவடிக்கைகளைப் பார்க்கலாம்.
தினபதி 17.07.90.

* தற்போது வடமாகாணத்தில் கூடுதலான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புலிகள் பலர் காடுகளில் இருக்கின்ற னர். நகரங்களையும்,கிராமங்களையும் நாம் முதலில் கைப்பற்றிக் கொள்வோம். பின்னர் காடுகளிலிருந்தும் அவர்களை விரட்டியடிப்போம்,
தினபதி 17.07.90.

* தமிழ்நாட்டில் அகதிகளாக சென்று தங்கியுள்ள எல்லா இலங்கைத் தமிழர்களையும் உடனடியாகத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கும்படி தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன். இங்கு அவர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படும். தென்பகுதியில் வாழும் சிங்களவர்களும், முஸ்லீம்களும் அவர்களைப் பாதுகாக்கத் தயாராக இருக்கின்றனர்.
தினபதி 23.07.90

* பிரபாகரன் இறந்துவிட்டதாக நானே கூறினேன். இப்பொழுது அவரது பிரதித்தலைவரைத் தேடுகிறோம். மக்கள் நிம்மதியாக வாழ்வதையே நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.
தினபதி 18.07.90.

* புலிகளின் யுத்த நிறுத்த நிபந்தனைகளை அரசாங்கம் நிராகரித்து விட்டது. வடமாகாணத்தையும் முற்றாகக் கைப்பற்றிய பின்னரே அடுத்த நடவடிக்கை. அதுவரை புலிகளுக்கெதிராக நடவடிக்கைகள் தொடரும்.
தினபதி 18.07.90.

* யாழ் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், பலத்த பலப்பரீட்சை ஏற்பட்டுள்ளது. கூடியவிரைவில் வடமாகாணமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும்.
தினபதி 27.07.90.

* விடுதலைப்புலிகளைத்தவிர எல்லாத் தமிழ் அரசியல் குழுக்களுக்கும் தமிழ் மக்களிடையே ஆதரவுண்டு.
சிந்தாமணி 12.08.90

* இந்த நாட்டில் வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள கடைசிப் புலியையும், புலிகள் வடக்கில் இருந்தாலும், கிழக்கில் இருந்தாலும் அவர்களை அழித்தே தீருவோம்.
தினபதி 08.08.90.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



* யாழ்ப்பாணத்திலிருந்து அப்பாவிப் பொதுமக்கள் அனைவரையும் வவுனியா மாவட்டத்தில் தற்காலிகமாக குடியமர்த்தி, புலிகளைத் தனிமைப்படுத்தி பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளோம். யாழ்ப்பாணத்தில் புலிகள் முற்றாக அழிக்கப்பட்ட பின்னரே பொதுமக்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியமர்த்தப்படுவர்.
*தினபதி 11.08.90.*

* படையில் தமிழரைச் சேர்ப்பதில் பிரச்சனை இல்லையா? (என்ற கேள்விக்கு) இல்லாமல் இல்லை. நாம் எதிரியை படையில் சேர்த்துக்கொள்ள முடியாது. இது கவனமாகச் செய்யவேண்டிய வேலை.
*17.08.90.*

* யாழ் கோட்டையில் 250 இராணுவத்தினர் உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரே இடத்தில் அடைபட்டிருக்கும் இவர்களின் மனோநிலை பாதிக்கப்படுவது தவிர்க்கமுடியாதது.
*தினபதி 24.08.90.*

* விடுதலைப் புலிகள் ஆள்பலத்தையும், ஆயுத வலிமையையும் இழந்துவருகின்றனர். ஆகவே அதிக காலம் நின்றுபிடிக்க முடியாது.
*சிந்தாமணி 12.08.90.*

* எமது விமானங்கள் யாழ் கோட்டைப் பகுதிமீது தாழப்பறக்க முடியாத வகையில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துகின்றனர்.
*சிந்தாமணி 12.08.90.*

* தமிழீழம் கிடைக்காவிட்டால் தமிழ்மக்களைக் கொன்றுவிட்டு தாங்களும் சாகப் போவதாக L.T.T.E யினர் கூறியுள்ளனர்.
*வீரகேசரி 12.08.90.*

* புலிகள் 4வது பெரிய இராணுவத்துடன் மோதியவர்கள் என்ற ஆணவத்துடன் எம்மோடு மோதுகின்றனர். குறுகிய காலத்துக்குள் அழிக்கப்படுவார்கள்.
*தினபதி 26.09.90.*

* கோட்டைக்குள் இப்போது இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். யாழ் பிரதேசத்தை துப்பரவு செய்யும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர். கூடியவிரைவில் இப்பகுதியில் இருந்து L.T.T.E யினரை முற்றாக அழித்துவிட்டு வைத்தியசாலையைத் திறப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.
*தினபதி 21.09.90.*

* வடக்கில் புலிகளை விரட்ட உக்கிரமான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ஊர்காவற்துறையைப் படைகள் கைப்பற்றி விட்டன. மண்டைதீவை மட்டுமல்ல யாழ்ப்பாணம் முழுவதையும் வளைத்துப்பிடிப்போம்.
*தினபதி 24.09.90.*

* யாழ்ப்பாணம் கோட்டைக்குள் விடுதலைப் புலிகள் நகர்ந்தால் நாம் அவர்களை ஒழித்துக்கட்ட எந்த நடவடிக்கையும் எடுப்போம்.
*தினபதி 23.11.90.*

* எந்தவித முன்நிபந்தனையும் இன்றி ஆயுதங்களை ஒப்படைத்து சரண் அடையவேண்டும். இல்லையேல் புலிகள் அழித்து ஒழிக்கப்படுவது நிச்சயம். கூடியவிரைவில் புலிகளை ஒழித்து அங்கு அமைதியை ஏற்படுத்துவோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.
*தினபதி 04.12.90.*

* புலிகளை அழிப்பதே எனது இலட்சியம். அவர்கள் முன்புபோல், அதாவது தோல்வியடையப் போகின்றோம் என்ற நிலையைத் தாமாகவே உணர்ந்து கொண்டால், அவர்களே ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு பேச்சுவார்த்தைக்கு வந்தால் நாமும் பேசத் தயார்.
*தினபதி 07.12.90.*

* வடக்கு கிழக்கு நெருக்கடியை யூன் மாதத்திற்குள் முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
*வீரகேசரி 24.02.1991*

**முற்றும்**


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# ஈழத்தமிழர்களின் நலன்களும் இந்திய நலன்களும் பின்னிப் பிணைந்ததே



அரசியல் ஆய்வு

கட்டுரைத் தொடர் - 2

இந்திய அரசு பல தடவைகளில் தமிழீழப் போராட்டத்தைப் பற்றி தனது கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கின்றது. இலங்கைப் பிரிவினைக்கு தான் என்றும் ஆதரவு வழங்க முடியாது என்றும் அதனால் தமிழீழம் என்னும் தனிநாட்டுக் கொள்கையை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் பலதடவை தெரியப்படுத்தியுள்ளது. இந்தியா அக் கொள்கைக்கு ஆதரவு வழங்கினால் இந்திய மண்ணிலே தற்போது தமது சுதந்திரத்திற்காக சில தேசிய இனங்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கையில் இக்கொள்கையானது இந்திய அரசியலில் பல சிக்கல்களை ஏற்படுத்தவே செய்யும் என்பதும் தெளிவாகின்றது.

இந்திய அரசின் அதிகாரிகள், அரசியல் தலைவர்களுடைய கருத்துப்படி இந்தியாவிலே ஒவ்வொரு மொழிவாரி மாநிலத்திற்கும் எந்தளவு அதிகாரம், அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றதோ அந்த வகையில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையும் தீர்க்கப்படுவதையே இந்தியா விரும்புவதையும், அந்த அளவிற்கே இந்தியா தீர்மானித்திருப்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

இந்திய மாநிலங்களுக்கு வழங்கப் பட்டிருக்கும் அரசியல் அதிகாரங்களை அடிப்படையாக வைத்தே இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டது. ஆயினும் அந்தளவு அதிகாரங்கள் கூட மாகாணசபைகளை அமைக்க உருவாக்கப்பட்ட ஸ்ரீ லங்கா அரசின் மாகாணசபைச் சட்டத்திலும் 13 வது சட்டத் திருத்தத்திலும் இடம் பெற்றிருக்கவில்லை.

இந்திய அரசின் இக்கொள்கையானது இந்தியா, தமிழ் மக்களுடைய பிரச்சினையை இன்னும் ஆழமாக விளங்கிக் கொள்ளவில்லை என்ற எண்ணத்தை தான் கொடுக்கின்றது. மேலும் இந்தியா தன்னுடைய மண்ணிலே ஏற்பட்டிருக்கும் தேசிய இனப் போராட்டங்களின் அரசியல் விளைவுகளுக்குப் பயந்து இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை சரியாகப் புரிந்து கொள்ள மறுக்கின்றது என்ற தோற்றப்பாட்டையும் கொடுக்கவே செய்கின்றது.

## புலிகளின் விளக்கம்

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் இந்திய அரசிற்கு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் யதார்த்த நிலைகளையும், நியாயங்களையும் பல தடவைகளாக எடுத்துக் கூறியே வருகின்றனர். மிக மிக முக்கியமான விடயத்தை இந்தியா கவனத்தில் எடுக்க வேண்டும். இந்திய அரசியல் அதிகாரப் பகிர்வின் பிரகாரம் தமிழ்மக்கள் பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு முன் ஓர் முக்கிய வித்தியாசத்தை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். அதாவது இந்திய மத்திய அரசானது எந்த மாநிலத்து மக்களுக்கோ அல்லது இந்தியாவில் உள்ள எந்த தேசிய இனத்திற்குகோ எதிரான இனப்படுகொலை ஒன்றைச் செய்யவில்லை.

ஆனால் சிறிலங்காவில் 1948ம் ஆண்டிற்குபின் மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் ஒட்டு மொத்தமாக தமிழர்களுக்கு எதிராக இருந்து வந்துள்ளதையும், தமிழர்களை அழித்து வருவதையும் இந்தியா உணர வேண்டும்.

தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசு ஓர் திட்டமிட்ட இனப்படுகொலை நடவடிக்கையை நடாத்தி வருகின்றது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். சிறிலங்கா அரசுகள் ஆரம்பத்தில் இனக்கலவரங்களை தூண்டிவிட்டு தமிழர்களை கொன்று குவித்தன. இன்று நேரடியாகவே தமிழ் மக்களின் மீது போர்ப் பிரகடனம் செய்து எமது மக்களின் மீது குண்டுமழை பொழிந்தும், தனது இராணுவ வேட்டை நாய்களைப் பாவித்து தமிழ்மக்களை கொன்று குவித்தும் வருகின்றது.

தமிழ் மக்களை கொல்வதோடு மட்டுமல்லாமல் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை அபகரித்தும் வருகின்றது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களை கிழக்குப் பகுதிகளில் ஏற்படுத்தி அக்குடியேற்றப் பகுதிகளுக்கு ஆயுதங்களை வழங்கியுள்ளதோடு, ஒவ்வொரு குடியேற்றப் பகுதிக்கும் பாதுகாப்பாக இராணுவ

www.tamileelamarchive.com

முகாங்களை அமைத்தும் உள்ளது. இக் குடியேற்ற வாதிகளையும், இராணுவத்தினரையும் அப் பிரதேசத்தி லுள்ள தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுத்தி தமிழர் பிரதேசங்களை சிங்கள மயமாக்கி வருகின்றது.

மேலும் வடக்கையும், கிழக்கையும் நிரந்தரமாக புவியியல் ரீதியாகப் பிரிக்கும் நோக்குடன் இவ் இரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட மணலாற்றுப் பகுதியை வெலி ஓயா என்னும் புதிய பிரதேசமாக்கி பெருந் தொகையில் சிங்கள மக்களை குடியேற்றி வருகின்றது. இதன் காரணமாக முல்லைத் தீவு மாவட்டத்தில் அலம்பில் கிராமத்தில் உள்ள தமிழர்கள் 10 மைலுக்கு அப்பால் உள்ள புல் மோட்டைக்குப் போக வேண்டுமானால் வவுனியா சென்று 150 மைலைக் கடந்து சிங்களப் பகுதிகளின் ஊடாகத்தான் புல்மோட் டையை அடையமுடியும். பாரம்பரியமாக தமிழர்கள் வசித்து வந்த கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு போன்ற பகுதிகளில் தமிழர்களை வெளியேற்றிவிட்டு அப் பகுதிகளை தடைசெய்யப்பட்ட பிரதேசங் களாக பிரகடனப்படுத்தி அப்பகுதிக்கே வெலிஓயா என்று பெயரிட்டுள்ளது. அப் பகுதிக்குச் செல்லும் தமிழர்களைக் கொன்று குவித்து வருகின்ற சிங்கள அரசுடன் எப்படி இந்திய மாநிலங்களுக்கு உள்ள முறையில் தீர்வைக் காணமுடிம்.

சிறிலங்கா அரசு தமிழர்களை அழித்து, தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை அபகரித்து, அவர்களின் கல்விக் கூடங்களைத் தகர்த்து, கலாச்சார சின்னங்களையும் அழித்து ஒட்டு மொத்தமாக முழுவடிவிலான இனப் படுகொலையை நிறைவேற்றி வருகின்றது. இத்தகைய இனவெறிபிடித்த சிறிலங்கா அரசை மத்திய அரசாகக் கொண்ட ஒரு தீர்வை இந்திய மாநிலங்களுடன் ஒப்பிடுக் காணமுடியுமா? இத்தகைய கேள்வி எழும் போது மீண்டும் இந்திய இலங்கை ஒப்பந்தம் பற்றி கேள்வி எழுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து உதயன் என்பவரால் எழுதப்பட்ட "இலங்கை இந்திய ஒப்பந்தம் ஓர் அமெரிக்கச்சதி" என்னும் நூல் இதற்குப் பல விளக்கங்களைக் கொடுக்கின்றது. அதன் ஆசிரியர் ஆரம்பத்தில் சுதந்திர இந்தியாவின் கடந்த 40 ஆண்டுகால வெளியுறவுக் கொள்கை வரலாற்றில் இழைக்கப்பட்ட மிகப்பெரிய தவறு இவ் ஒப்பந்தம் என்று குறிப்பிடுகின்றார்.

**சிறிலங்காவில் 1948ம் ஆண்டுக்குப் பின் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் ஒட்டு மொத்தமாக தமிழர்களுக்கு எதிராக இருந்து வந்துள்ளதை யும், தமிழர்களை அழித்து வருவதையும் இந்தியா உணரவேண்டும்.**

இவ் ஒப்பந்தம் உடனடியாக தமிழர்களுக்குத் தீங்காகவும் நீண்டகாலத்தில் இந்தியாவிற்கு தீங்காகவும் அமையும் எனக் குறிப்பிட்டு இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் தோற்கடிக்கப் படுவது தமிழ் மக்களுக்கு மட்டும் உரிய தோல்வி அல்ல. எதிர் காலத்தில் இந்தியாவிற்கும் பெரும் தோல்வியாகும் என்பதை தெட்டத் தெளிவாக கூறுகின்றார்.

தற்போது இந்திய இலங்கை ஒப்பந்தத்தைப் பற்றி கேள்வி எழும்போது இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின் எமது மண்ணில் ஓர் விரும்பத்தகாத யுத்தமும் பெரிய இரத்த ஆறும் ஓடியது. அந்நிலையில் அதே ஒப்பந்தம் மீண்டும் தமிழர்களுக்கு நன்மை புரியும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்த்து வைக்கும் என்பதை எப்படி நம்பமுடியும். அதே ஒப்பந்தத்தில் தான் மாகாணசபைத் தீர்வை தமிழ் குழுக்கள் ஏற்றுக் கொண்டு ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென்றும் அப்படி ஒப்படைக்கத் தவறின் இந்தியாவும், இலங்கையும் சேர்ந்து ஆயுதக்களைவு நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

1987ம் ஆண்டு அக்டோபர் தொடக்கம் 1990 ம் ஆண்டு இந்தியப் படையின் வெளியேற்றம் வரை நடந்த யுத்தமென்பது இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட ஆயுதக்களைவு நடவடிக்கை மட்டுமே என்று தான் கூறப்படுகின்றது. இந்நிலையில் தமிழ்மக்கள் எப்படி தொடர்ந்தும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிக்க முடியும். ஆனால் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை இந்தியாவினுடைய பாதுகாப்பை பொறுத்த விடயங்களில் இந்தியாவிற்கு எதிரான கொள்கை உடையவர்கள் அல்ல. தெற்கு ஆசியப் பகுதியில் குறிப்பாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் முதன்மை நிலையை எப்போதும் அங்கீகரித்து வந்துள்ளனர். மேலும் இந்து சமுத்திரத்தை சமாதானப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி இருக்கும் இந்தியாவின் கொள்கை யையும் ஆதரித்து வருகின்றனர்.

www.tamileelamarchive.com

வேறு ஒரு வல்லரசு இப் பிராந்தியத்தில் புகுந்து இந்திய மண்ணின் மக்களின் பாதுகாப்பிற்கு குந்தகமாக செயற்படும் போது அதனை ஆதரிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ போவதில்லை. ஆனால் இந்தியாவோ வல்லரசுத் தன்மையுடன் தமிழர் பிரச்சினையை அணுகும் போது அக் கொள்கையை எதிர்த்து நிற்க வேண்டிய தார்மீகக் கடமை விடுதலைப் புலிகளைச் சாருகின்றது. இதை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இந்திய, விடுதலைப் புலிகள் போர்நடந்து கொண்டிருக்கையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கட்கு எழுதிய கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

சிறிலங்காவின் ஒற்றை ஆட்சி முறையினாலோ இந்திய இலங்கை ஒப்பந்தத்தினாலோ அல்லது வேறு எந்தத் தீர்வினாலுமோ தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கமுடியாது என்பதையும் தீர்மானமாகக் கூறமுடியும்.

நவீன உலகின் நவீன அரசியல் வடிவங்களின் மூலம் தமிழீழப் பிரச்சனையை தீர்க்க முடியுமா என்பது பற்றியும் இந்தியாவிடமிருந்து ஈழத்தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் ஆதரவு பற்றியும் தொடர்ந்து பார்ப்போம். ■

தொடரும்..

சிறுதுளி...

## ஆலயவழிபாட்டிற்கு பெருமாள் தடை.

இந்தியாவில், மத்திய பிரதேசத்தில் மத்திய அரசின் பாதுகாப்பில் உள்ள வரதராஜப் பெருமாளை பீகாருக்கு கொண்டுசெல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது. அவரை பராமரிக்க அதிக செலவாகிறது என மத்திய பிரதேச அரசு எதிர்ப்புத் தெரிவித்த தால் இந்த முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது.

வரதராஜப்பெருமாள் குடும்பத்தினரின் பாதுகாப்பிற்காக மத்தியப்பிரதேச அரசு இதுவரை 42 இலட்சம் ரூபா செலவு செய்திருக்கிறது. ஆனால் இதைத் தொடர்ந்து, மத்தியப் பிரதேச அரசுக்கு அனுப்பவேண்டிய தொகை இன்னும் மத்தியஅரசால் தரப்படவில்லை. இது குறித்து, மத்திய பிரதேச அரசு எழுதிய கடிதங்களுக்கும் இதுவரை எந்தப் பதிலும் இல்லை எனக் கூறப்படுகிறது.

எனவே, இனிமேலும் வரதராஜப்பெருமாள் இங்கு தங்கக் கூடாது என அந்த மாநில அரசு மத்திய அரசிடம் கூறிவிட்டது.

இது தவிர, வரதராஜப்பெருமாள் மத்திய அரசின் உளவுத் துறையினரின் தீவிரப் பாதுகாப்புடன் சந்தேரி பகுதியில் இருப்பதனால் அங்கு பொதுமக்கள் செல்லமுடி யாத நிலமையும் ஏற்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் மிகவும் புகழ் பெற்ற ஒரு கோவில் உள்ளது. எனவே இங்கு வழிபாடு நடத்த வரதராஜப் பெருமாள் தடை யாக இருக்கின்றார் என அந்த ஊர் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# நிழலில நிஜம்

ஒளச்சி

" மத்தாப்பு " வாணத்தை மண்ணக்குவிச்சு நடுவில நட்டு விட்டிட்டு, நீட்டுக் கொள்ளியெடுத்து பதுங்கிப் பதுங்கி வந்து பயந்து பயந்து கொழுத்திப் போட்டு " சுர் " என்டு ஓடிப்போய் மரங்கள், செடியளுக்கு பின்னால ஒளிச்சு நிண்டு கொண்டு சிறுசுகள் பாக்குங்கள். காதச் செவிடாக்கி பெருஞ் சத்தத்தோட வெடிக்கப் போகுதெண்டு நினைச்சு காதப் பொத்திக் கொண்டு, இமையளைச் சுருக்கி, கண்களைக் குறுக்கி ஆவல் ததும்பப் பாத்துக் கொண்டிருப்பினம். ஆனால் மத்தாப்பு வெடிக்காது ; "புஸ்" "புஸ்" எண்டு கலர் கலராச் சீறும். மினுங்கல் மினுங்கலா வெள்ளிக் குஞ்சங்கள் மாதிரி எழில் காட்டும். பச்சை, சிவப்பு, மஞ்சள் எண்டு சவுக்கார நுரை உருண்டைகள் ஆட்டம் துள்ளிக் கிளம்பி வெடிச்சுச் சிதறும். பார்த்துக்கொண்டிருக்கிற சின்னவையளின்ர எதிர்பார்பை வேறு திசையில கொண்டு போய் அழகு காட்டும்; உண்மையில பாக்கிறதுக்கு அழகாகத்தான் இருக்கும்.

உந்தமாதிரி கலர்கலரா விடுறதில ஈரோசில ஒரு கோஸ்டி வலு கில்லாடியள். காலத்துக்கு காலம் விதம் விதமாய் விடுவினம். கொழும்பிலையும், வெளிநாடுகளிலையும் இருந்து கொண்டு கலர் கலரா விடுகினம்.

"மக்களில்லாத மண்ணை நேசிக்கவில்லை" எண்டு இன்னும் சில அரசியல் முடங்கள் ஒப்பாரி வைக்கிறாங்கள்; ஆடு நனையுதெண்டு ஓநாய் அழுத கதைமாதிரி. ஒவ்வொரு " காம் " பைச்சுற்றியும், பிஞ்சு உடம்புகளை வரிசைக்கு நிறுத்தி, தங்களை மக்களின்ர கவசமாக்கிக்கொண்டு அந்தச் செல்வங்கள் தினம் தினம் சாகுதுகள். அந்த மனித தெய்வங்கள் இல்லை எண்டால் எங்கட மண்ணும் இல்லை, எங்கட மக்களும் இல்லை. ஆனால் இப்படியான கோஸ்டிகள் இருப்பினம். பிரேமதாசாவோ அல்லது சிறிமாவோ, அல்லது யாரோ ஒரு புஞ்சி பண்டாவோ.... எவன் வந்தாலும் காலப்பிடிச்சுக் கொண்டு அப்பனே....., அம்மையே..... நீங்கள் தான் எங்களை ஆட்கொள்ள வேணும்; உங்கட ஞானக் கண்ணை காட்டுங்கோ ....; காட்டுங்கோ....; எண்டு அடம்பிடிக்கிறவங்கள் தப்பிடுவாங்கள்தானே. எண்டாலும் அதுகும் எத்தினை நாளைக்கு. காலில கிடக்கிற செருப்பு தேயிற வரைக்கும்தானே உபயோகம்; அதுக்குப் பிறகு குப்பைமேட்டிலதானே.

ஈரோஸ் உண்மையில கலைஞ்சுட்டுது. பாலகுமாரும், மற்றய ஈரோஸ் போராளிகள் எல்லாரும் விடுதலைப் புலிகளோட இணைஞ்சிட்டினம்; பாலகுமாரே அறிக்கை விட்டிட்டார். சொந்த நலன்களை பேண நினைக்கிறவங்களுக்கு உந்த விசயம் வேப்பங்காய் மாதிரி கசக்கத்தானே செய்யும். ஒரு தேசியத்தலைமை உருவாக வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு ஈரோஸ் கலைக்கப் படுகிறது எண்டு பாலகுமார் சொன்னதை பாலகுமாருக்கு எதிரான ஆட்கள் ஏற்றுக்கொள்ளேல்ல. இந்திய உளவுப்படையின்ர எடுபிடியள்ள ஒருவராய் இருந்த, சங்கர் ராஜியின்ர ஆக்களுக்கு உந்த விசயம் விசர் தனமான விவகாரம் மாதிரி தெரிஞ்சுது. உடன வெளிநாடுகளில "ஐயோடி ஆத்தேடி" எண்டு இட மட்டங்கள் பிரச்சாரம் செய்தாங்கள்.

பாலகுமாரை புலியள் பிடிச்சு வைச்சிருக்கிறான்கள்; துப்பாக்கி முனையில பாலகுமாரை அறிக்கை விடப் பண்ணிட்டாங்கள். செஞ்சிலுவைச் சங்கம் பாலகுமாரை மீட்டுத்தர வேணும் எண்டு "நோட்டீஸ்" விட்டாங்கள்; எல்லாம் புலுடா விளையாட்டு. ஒரு இயக்கத்தின்ர தலைவனை துப்பாக்கி முனையில நிறுத்தி இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கப் பண்ணிட்டால்; துப்பாக்கிக் குழலுக்கு அவர் அடிபணிஞ்சிட்டார் எண்டால் அவரை தலைவரெண்டு என்னெண்டு சொல்லுறது. இதில விசயம் என்னெண்டால் இப்பிடிச் சொல்லுறதால பாலகுமாரை மட்டந் தட்டுறது தான் சங்கர் ராஜியின்ர நோக்கம்.

இந்தியன் ஆமி எங்கட மண்ணைவிட்டு போன கையோட பாலகுமார் அறிக்கை ஒன்று விட்டவர். அதில அவர் அந்நியச் சக்திகளின் தலையீடு தமது இயக்கத்தில் ஏற்பட்டிருப்பதை கவனத்தில் கொண்டு, சில உறுப்பினர்கள் மீது கவனத்தை செலுத்த வேண்டியுள்ளது எண்ட கருத்துப்பட எழுதியிருந்தார். அப்பவே ஈரோசுக்குள்ள கச

www.tamileelamarchive.com

முசா தொடங்கியிட்டுதெண்டு சனத்துக்கு தெரிஞ்சபோச்சு. நீறு பூத்த நெருப்பு மாதிரிக் கிடந்த விவகாரம் இப்ப சுவாலைவிட ஆரம்பிச்சிருக்கு. பாலகுமார் யதார்த்தத்தை புரிஞ்சு கொண்டு நாட்டில இருந்து செயல்படுகிறார் எண்டுதான் நினைக்கத் தூண்டுது. ஆனால் சங்கர்ராஜி அப்படி இல்லத்தானே; லண்டனில தானே அவற்ற நிரந்தரச் சீவியம். அப்பப்ப கொழும்புக்கும், டில்லிக்கும் போய்வாறதைத் தவிர, செய்தியள் அறியிறதைத் தவிர எங்கட சனங்களைப் பற்றி, எங்கட மண்ணைப் பற்றி அறிய வாய்ப்பில்லை தானே. இவற்ற ஆட்கள் எண்டு சொல்லி கொழும்பிலையும் கொஞ்சப் பேர் இருக்கிறாங்கள். பிறேமதாசாவும் அதைத் தானே விரும்பிறார். ரஞ்சன்ர குண்டுவெடிப்பால கொழும்பில உள்ள இவையளையும் ஆமிக்காரர் பிடிச்சவங்கள்; பிறகு தவறுதல் எண்டு வருத்தம் தெருவிச்சு விட்டுட்டாங்கள். தகவல் பரிமாற்றங்களிலை எற்படுகிற சிறு தவறுகளால தங்கட ஆட்கள் யார், எதிரியளின்ர ஆட்கள் யாரெண்டு தெரியாமல் ஆமிக்காரருக்கு தடுமாற்றங்கள் வாறது " நோமல் " தானே.

அவங்களும் " சொறி" சொல்லிப்போட்டு விட்டுட்டாங்கள்; இவங்களும் நெளிஞ்சு, குனிஞ்சு நிண்டு கொண்டு " தாங்ஸ் " சொல்லியிட்டினம்.

குண்டெண்டு சொன்ன உடனதானே பட்டெண்டு ஞாபகம்வருகுது ஈரோசின்ர தமாசு விளையாட்டுக்களைப்பற்றி. குண்டு வெடிப்புக்கு ஆரும் உரிமை கோராட்டா அது ஈரோஸ்தான் வைச்சிருக்கும் . பகிடிக்கில்லை ஈரோஸ் எண்டு கதைக்கிற ஆட்களை விசாரிச்சுப் பாருங்கோ.... ஒரு நமட்டுச் சிரிபொண்டு சிரிப்பினம். கொலர தூக்கிவிட்டுக் கொண்டு, ஆகாசத்தைப் பாத்து உதட்டைக் கடிப்பினம், வேர்வை துடைப்பினம், இமையைத்தூக்கி சொல்ல முடியாத பரமரகசியம் மாதிரி பாசாங்கு செய்வினம். அலட்சியத் தனமான, புதிர் நிறைந்த அவையளின்ர சிரிப்பில, உது என்ன பிரமாதம்; ஆகாசத்தைக் கூட வில்லா வளைக்க எங்களால முடியும் எங்கிறது மாதிரி அபிநயிப்பினம். எல்லாம் மத்தாப்பு விளையாட்டு எண்டு உங்களுக்கு விளங்கும் எண்டுறது அவயளுக்கு விளங்காது. கடைசியா கொழும்பில குண்டு வெடிசதெல்லே.. ரஞ்சனும் இன்னும் கொஞ்சப் பேரும் செத்துப்போச்சின மெல்லே. யாரு செய்திருப்பினம் எண்டு உங்களுக்குத் தெரியும் எண்டாலும் காரியமில்லை, சும்மா விளையாட்டுக்கு சங்கற்ர ஆக்களிட்டக் கேட்டுப் பாருங்கோ யாரு செய்ததெண்டு....; அதுக்கும் அதே நமட்டுச் சிரிப்புத்தான் சிரிப்பினம். கடைசியா ஒரு அறிக்கை ஒண்டு விட்டவை, கொழும்பில நடந்த குண்டு வெடிப்புக்கும், தங்களுக்கும் தொடர்பில்லையாம்; அப்பிடி யாரும் தங்களைச் சந்தேகித்தால் தப்பாம். இப்ப உங்களுக்கு கிரந்தச் சிரிப்பொண்டு வாறமாதிரி இல்லையே... பின்னயென்ன... எந்த மடையனெண்டாலும் சொன்னவனே உவங்கள் செய்திருக்கக் கூடும் எண்டு. எல்லாம் கலர் விளையாட்டுகள் தான்.

அந்த அறிக்கையில இன்னொரு விசயத்தையும் குறிப்பிட்டிருக்கினம். அதாகப்பட்டது...
" தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்ற உறுதிப் பாட்டின் அடிப்படையிலேயே நாம் ஆயுதப் போராட்ட நடைமுறையை கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து பாராளுமன்றத்திற்கு வந்திருக்கின்றோம்." எண்டு அறிக்கை விட்டு தங்கட தரத்தை உறுதிப் படுத்திட்டினம். கூட்டணி காரரும் உந்த நீரோட்டத்தில தானே நீச்சலடித்தவங்கள். அப்ப அவங்களை உவங்கள் ஏன் துரோகிகள் எண்டவங்கள்.

மற்றது இன்னொரு முக்கியமான சங்கதியும் சாடை மாடையா வெளிப்படத் தொடங்கிவிட்டது. ஈரோசில இருந்து அதன் தலைவர் பாலகுமாரை வெளியேற்றப்போகினமாம். கதை இப்படித்தான் போகுமெண்டு விசயங்களை ஊண்டிக் கவனிச்சிருந்தீங்க எண்டா புரிந்திருக்கும்.

ஈரோசில இருந்து சங்கற்ர ஆக்கள் வெளியேற்றப்பட்டவையோ, அல்லது பாலகுமாரையும் மற்றப் போராளிகளையும் சங்கர் வெளியேற்றப் போறாரோ......?

.....அப்ப புலியள் பிடிச்சு வைச்சது எண்டதெல்லாம் புலுடாக் கதைதானே. என்ன இதுகளை யோசிக்க யோசிக்க மண்டை கிறுகிறுக்குதே..... அப்பிடியெண்டால் இந்த விசயத்தை சற்று நேரம் யோசிக்காம எப்பன் ஓய்வெடுங்கோ. ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# ஒரு அகதி முகாமிலிருந்து ....

* மாணி நாகேஷ் *

அது தென் ஈழத்தில் அமைந்திருக்கும் ஒரு தமிழ்க் கிராமம். இப்போது செத்துக் கிடந்தது. கல்முனை என்ற வியாபார நகரத்திற்கு அண்மையில் பாரம்பரியமாய் தமிழர் வாழ்ந்து வந்த அந்தப் பாண்டிருப்புக் கிராமந்தான் இப்போது சாகடிக்கப்பட்டு சிதையுண்டு கிடந்தது. எங்கும் ஒரே நிசப்தம். சில நாய்கள் மட்டும் வீதிகளில் நின்று வேதனையுடன் ஊளையிட்டுக்கொண்டிருந்தன. காகங்களும் பலமாகக் கரைந்து தன் சகாக்களை விருந்துக்கு அழைத்தன. வழமையாக புழுக்களும், பூச்சிகளும் அழுக்குகளுமே விருந்தாகிப் போகும் அந்தப் பறவைகளுக்கு கண்ணில் பட்டு விட்ட புதிதான விருந்தொன்று புசிப்பதற்கு புதிய சுவையைக் கொடுத்தது. ஆம்; அந்தத் தெருவோரத்தில் ரயர் போட்டு எரிக்கப்பட்ட தமிழ் மகன் ஒருவரின் உடல் முழுமையாய் எரியாமல் சிதைந்துபோய் கிடந்தது.

எரிந்துபோன வீடுகள்.. உடைந்துபோன கட்டிடங்கள்... கருகிப்போன பயிர்ச்செடிகள்.... பாண்டிருப்புக் கிராமம் முழுமையாகவே உயிர்ப்பற்றுக் கிடந்தது.

"ஏம்மா நாங்கள் இங்க வந்திருக்கிறம்"

தன் தாயின் கரங்களை இறுகப்பற்றிய படி அந்தப் பத்து வயதுச் சிறுவன் தவராசா கேட்கிறான்.

"இது அகதி முகாமடா ராசா. எங்கட வீட்டை அந்தப் பாவிப்பசங்க எரிச்சுப் போட்டாங்களெல்ல. இப்ப எங்களுக்கு இருக்க இடமில்லை. அதுதான்டா இங்க வந்திருக்கிறம்"

சிவகாமியின் வாயிலிருந்து வார்த்தைகள் வதங்கிப் போய் வெளியே வந்தன.

"அவங்களெல்லாம் திரும்பவும் இங்க வராங்களேம்மா"

திரும்பவும் தவராசா கேட்கிறான்.

அவங்கள்... அவங்கள்... ஓ; அந்தப் பிஞ்சு உள்ளத்தின் மனதை இன்னும் அந்தப் பயங்கரம் விட்டுவிலகவில்லை. சிவகாமிக்கு கதறி அழவேண்டும் போல இருந்தது. ஆனாலும், அவள் அழவில்லை. திடப்படுத்திக்கொண்டு அமைதியாகச் சொன்னாள்.

"இல்லடா மோனே, அவங்கள் இஞ்ச வராங்கள். வரவேமாட்டாங்கள். நீ ஒன்றுக்கும் பயப்படாதையடா ராசா. இஞ்ச நாங்கள் பயமில்லாமல் இருக்கலாம்."

தளதளத்த குரலில் தாய் கூறிமுடித்தபோது தாயை வாஞ்சையோடு நோக்கியபடி தவராசா சொன்னான்.

"இல்லேம்மா நான் பயப்படேல்ல"

தன் மகனின் தலையைக் கோதிவிட்டபடி சிந்தனையில் மூழ்கினாள் சிவகாமி. சில தினங்களுக்கு முன் நடந்த அந்தப் பயங்கர நிகழ்வுகள், நினைவுகளாக அவள் முன் நிழலாடியது.

எங்கும் ஒரே இருள். இருளைக் கிழித்துக் கொண்டு திடீரென எழுந்த அவல ஒலிகள் பாண்டிருப்புக் கிராமம் முழுவதுமாக சேர்ந்து ஒலிக்கின்றது. ஊர் ஒழுங்கைகள் எங்கும் றக் வண்டிகளின் உறுமல்கள்... ஐயோ... அம்மா... கடவுளே எங்களைக் காப்பாற்று.... எங்கும் ஒரே அபயக் குரல்கள். சிவகாமியின் வீட்டையும் அந்தக் கூட்டம் நெருங்குகிறது. சிவகாமியின் புருஷன் செல்லமுத்து தன் குடும்பத்தைக் காப்பாற்ற வழியின்றி செய்வதறியாது திகைத்து நிற்கின்றான். தப்பியோட வழியில்லை. வீட்டின் முன்புறமும் பின்புறமும் எங்குமே அந்தக் கூட்டத்தின் காட்டுக் கூச்சல்கள். உள்வீட்டின் படுக்கையறையில் அலுமாரி ஒன்றின் பின்னால் பதுங்கிக் கொள்கிறாள் சிவகாமி. தாயைக் கட்டியணைத்தபடி வலதுபுறமிருந்து நடுங்கிக் கொண்டிருந்தாள் சிவகாமியின் வயதான மகள் கயல்விழி. தாயின் சேலைக்குள் புகுந்து கொண்டு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஒன்றும் புரியாமல் தாயைக் கட்டியணைத்தபடி அழத் தொடங்கினான் தவராசா. தன் மூத்த மகன் குமார வேலுவை குசினியில் வைத்துப் பூட்டிவிட்டு மரணத்தை எதிர்நோக்கி நின்றான் செல்லமுத்து. அந்தக் கூட்டம் வீட்டை நெருங்கிவிட்டது. கதவை உடைக்கும் சத்தம் பலமாகக் கேட்கிறது. கொலைவெறியுடன் பலமாக ஒலிக்கும் சிங்களக் குரல்கள்.... இடையிடையே சில தமிழ்க் குரல்கள்... சிங்கள இராணுவமும் முஸ்லீம் ஊர்காவற் படையும் தங்களை அழிக்க வந்திருப்பதை செல்லமுத்து புரிந்து கொண்டான்.

அந்தோ! கதவை உடைத்துக் கொண்டு கொலைவெறியுடன் நுழைகிறது அந்தக் காடையர் கூட்டம். ஒவ்வொருவருடைய கையிலும் பளபளக்கும் கூரிய ஆயுதங்கள்.... மறுகணம் காடையன் ஒருவனின் கையில் இருந்த கோடாரி போன்ற கூரிய ஆயுதம் செல்லமுத்துவின் தலையில் விழுந்த போது அவன் பலத்த கத்தலுடன் கீழே விழுகிறான். தலையில் இருந்து பீறிட்ட இரத்தம் அந்த வீட்டு மண்டபம் எங்கும் சிதறிய போது குசினிக்குள் இருந்து ஓடிவந்த குமார வேலுவின் முதுகில் இன்னொரு காடையன் கூரிய ஆயுதத்தால் ஓங்கி வெட்டுகிறான். வேதனையால் அவன் போட்ட கூச்சல் வீடுமுழுவதும் எதிரொலிக்கிறது. இதற்கிடையே படுக்கையறைக்குள் சென்ற இன்னொரு கூட்டம் கயல்விழியை இழுத்துக் கொண்டு வெளியே செல்கிறது. அதைத் தடுக்க முற்பட்ட சிவகாமியின் முதுகில் பொல்லால் ஒருவன் ஓங்கி அடிக்கிறான்.

இரண்டு நாட்களுக்குப் பின் சிவகாமிக்கு சுயநினைவு வந்தபோது தவராசா மட்டும் அவளருகே இருந்து முனகிக் கொண்டிருந்தான். பாண்டிருப்புக் கிராமப் பாடசாலையில் தாம் அகதியாகக் கொண்டுவரப்பட்டது அப்போதுதான் சிவகாமிக்குப் புரிந்தது. அன்று நடந்த அந்தச் சம்பவத்தில் செல்லமுத்துவும், குமார வேலுவும் கொல்லப்பட்டதையும், கயல்விழி அந்தக் காடையர்களால் கெடுக்கப்பட்டு பின்னர் கொல்லப்பட்டதையும், வீடு சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டதையும் அப்போதுதான் அவள் தெரிந்து கொண்டாள். தானும், தவராசாவும் தற்செயலாக உயிர் தப்பிக் கொண்டதையும் அவள் புரிந்து கொண்டாள்.

இப்போது அந்த அகதி முகாம் சோபையிழந்து மயானம் போலக் காட்சியளித்தது. அந்தக் கோர இரவில் தப்பிப்பிழைத்த சில நூறு தமிழர்களே அந்த முகாமில் குழுமியிருந்தனர். இன்னும் சிலர் அழுது கொண்டேயிருந்தார்கள். ஒவ்வொருவருடைய முகத்தையும் மரணபீதி கவ்வியிருந்தது.

அந்தப் பாடசாலை வளவுக்குள் ஓங்கி வளர்ந்து நின்ற ஒரு வாகை மரத்துக்குக் கீழ் இருந்தபடி எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் சிவகாமி. தாயின் மடியில் படுத்திருந்தபடி பூத்துக்குலுங்கும் அந்த மஞ்சள் நிற வாகைப் பூக்களை கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான் தவராசா. இந்த வாகை மரம்.... இந்த வாகைத் தடிகளின் கொடுமை.... சில நாட்களுக்கு முன்புவரை தான் ஓடி ஆடி கல்வி பயின்ற பாடசாலை. சில கணங்கள் தன் பாடசாலை நாட்களை மனதுக்குள் சுற்றி வந்தான் தவராசா.

ஒரு நாள் பாடசாலை இடைவேளை நேரத்தின் போது தன் நண்பர்களுடன் சேர்ந்து ஆமியும் புலியும் விளையாடப் புறப்பட்டபோது புலிப்படையின் பக்கம் தான் தான் நிக்கவேண்டுமென பிடிவாதமாக நின்று இறுதியாக ஆமியின் சார்பாக ரோந்து வந்த தன் நண்பர்களை மறைந்திருந்து தாக்கி வெற்றிகொண்டு ஆர்ப்பரித்தபோது தற்செயலாக அங்கு வந்த வாத்தியார் அனைவரையும் அழைத்து வாகைத் தடியினால் விளாசு விளாசென்று விளாசியதெல்லாம் ஒரு கனவாக அந்தச் சிறுவனின் உள்ளத்தில் தோன்றி மறைகிறது.

சிவகாமியின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர்த் துளிகள் தவராசாவின் கைகளில் பட்டு வழிந்தபோது ஏக்கமுடன் தன் தாயைப் பார்த்தான்.

"ஏனம்மா அழுகிறாய். அண்ணாவையும், அக்காவையும் அப்பாவையும் அவங்கள் சாக்கொண்டு போட்டாங்கள் எண்டுதானே."

சிவகாமி தாங்கமுடியாமல் மகனைக் கட்டியணைத்தபடி தேம்பித் தேம்பி அழத்தொடங்கினாள்.

"அழாதேம்மா"

கண்ணீரைத் துடைத்துவிட்டபடி தாயைத் தேற்ற முற்பட்டான் தவராசா.

ஓ; எவ்வளவு அமைதியான குடும்பம். ஒரு புழுவுக்குக்

**அந்தக் கூட்டம் வீட்டை நெருங்கிவிட்டது; கதவை உடைக்கும் சத்தம் பலமாகக் கேட்கிறது. கொலை வெறியுடன் பலமாக ஒலிக்கும் சிங்களக் குரல்கள்.... இடையிடையே சில தமிழ் குரல்கள்....**

www.tamileelamarchive.com

கூட தீங்கு நினைக்காத புருஷன். எந்தப் பாவமும் அறியாத மகனும், மகளும்.....

ஏதோ யோசித்தபடி இருந்த தவராசா திடீரெனச் சொன்னான்.

"அம்மா", அன்றைக்கு நிசார் மாமாவும் கையில துவக் கோட வந்தவரம்மா. நான் கண்டனான் அம்மா!

தாய் அமைதியாக இருப்பதைப்பார்த்த தவராசா தொடர்ந்து கேட்டான்.

"ஏனம்மா நிசார் மாமாவும் அவங்களோட சேர்ந்து வந்தவர்? அண்ணாவோடதானம்மா நெடுகலும் சேர்ந்து திரியிறவர்."

குழப்பமாயிருந்த அந்த நிகழ்வுபற்றி விளங்கிக்கொள்ளத் துடித்தது அந்தச் சிறுவனின் மனது. தென் ஈழத்தில் வாழும் முஸ்லீம்களும், தமிழர்களும் எவ்வளவு நெருக்கமாக வாழ்ந்தார்கள் என்பதை அங்கு சென்று பார்த்தவருக்குத்தான் தெரியும். தவராசா குறிப்பிட்ட நிசார் சிவகாமியின் இறந்து போன மகனின் உற்ற நண்பன். தவராசா கூறியது உண்மைதான். சிவகாமிக்கு அது தெரியும். சிங்கள அரசினால் பகடைக்காய்களாக்கப்பட்டு முஸ்லீம் தலைவர்கள் விரித்த வலையில் வீழ்ந்தவர்களில் நிசாரும் ஒருவராகிவிட்டான். தன் மகனின் கேள்விக்கு மௌனத்தையே பதிலாக்கினாள் சிவகாமி.

நாட்கள் மெல்லென நகர்ந்தன. அந்தப் பாடசாலை அகதி முகாமில் முடங்கிக் கிடப்பவர்கள் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி சித்தப்பிரமை பிடித்தவர்களாக இருந்தார்கள். சரியான பராமரிப்பின்றி அந்த முகாமில் உள்ளவர்கள் அநாதரவாகவே விடப்பட்டிருந்தார்கள். பொதுத் தாபனமென்று வருவோரும் அகதிகளின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்ய முடியாமல் திரும்பி விடுவார்கள்.

வானத்தை இருள் கவ்வத் தொடங்கியது. அந்த இருள் சூழும் வேளையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பாண்டிருப்புக் கிராமம் சுடுகாடாகவே காட்சியளித்தது. தன்மடியில் மெய்மறந்து தூங்கிக்கொட்டிருக்கும் தவராசாவின் நெற்றியில் குனிந்து முத்தமிட்டாள் சிவகாமி. ஓடியாடித் திரியவேண்டிய வயதில் அகதியாய் ஆகிவிட்ட தன்மகனின் நிலையை எண்ணும் போது இதயம் வெடித்துவிடும் போல இருந்தது அவளுக்கு.

காட்டு நரிகளின் ஊளைச் சத்தம் இருளை வரவேற்பதுபோல இருந்தது. எங்கும் அமைதி... மயான அமைதி... அந்தோ....! அந்தக் கொடிய மிருகங்கள் மீண்டும் அகதி முகாமுக்குள்ளும். தூங்கிய அகதி முகாம் விழித்துக் கொள்கிறது. அகதி முகாமைச்சுற்றி வளைத்த அந்தக் கொடியவர்கள் கூச்சலிட்டபடி உள்ளே நுழைகிறார்கள். தாயின் மடியில் படுத்திருந்த தவராசா திடுக்கிட்டெழுந்து தாயைக் கட்டியணைத்தபடி கதறியழுகிறான்.

"அவங்கள் வந்திட்டாங்களாம்மா? அவங்கள் வந்திட்டாங்களாம்மா?"

தவராசாவின் வாயிலிருந்து இந்த வார்த்தைகளே திரும்பத் திரும்ப வந்துகொண்டிருந்தன.

அந்தக் காட்டுமிராண்டிகளின் கைகளில் கூரிய ஆயுதங்கள் மின்னிக்கொண்டிருந்தன.

எங்கும் மரண ஓலங்கள்.... கூக்குரல்கள்.... ஐயோ.... அம்மா.... கடவுளே.....

பலர் கோரமாகத் தாக்கப்படுகிறார்கள். அகதிமுகாமுக்குள்ளும் இரத்தக் கறை படிகிறது. பல இளைஞர்களும் யுவதிகளும் வெளியே இழுத்துச் செல்லப்படுகின்றார்கள். அவர்களுக்கு என்ன நடக்கும் என்று தெரியாது. அகதிமுகாமிலும் அந்தக் கொடியவர்களின் அகோரத்தனங்கள்; அந்த அப்பாவி மக்களின் இதயங்களை நிலை குலைய வைக்கிறன. அந்தப் பாடசாலை அகதி முகாமின் நிலம் கண்ணீரி லும் இரத்தத்திலும் தோய்ந்துபோய் இருந்தது. சிலர் அரைகுறைக் காயங்களுடன் இன்னும் முனகிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளும் சிறுவர்களும் அழுதழுது சோர்வடைந்திருந்தனர். அந்த அகதி முகாம் விழித்திருக்க அந்தக் கொடிய இரவும் மெல்லென நகர்ந்து கொண்டிருந்தது.

தாயின் மடியில் படுத்திருந்த தவராசா தாயின் கைகளை இறுகப்பற்றியபடி சொன்னான். "அம்மா பயமாயிருக்குதம்மா"

"என்ன ராசா பயப்படதாயணை. நான் பக்கத்தில்

**ஏனம்மா நிசார் மாமாவும் அவங்களோட சேர்ந்து வந்தவர்? அண்ணாவோடதானம்மா நெடுகலும் சேர்ந்து திரியிறவர்.**

www.tamileelamarchive.com

இருக்கிறன்" மகனை மார்புடன் அணைத்தபடி சிவ காமி கூறினாள்.

"அவங்கள் திரும்பவும் இங்க வருவாங்களாம்மா?" தவராசா வேதனை கலந்த பயஉணர்வுடன் கூறி னான்.

"இல்லடா ராசா" அவளால் தொடர்ந்து பேசமுடிய வில்லை.

"இல்லம்மா... இஞ்ச ஒருத்தரும் எங்களை காப்பாத்த மாட்டினம் அம்மா. அவங்கள் திரும்பவும் எங்களை கொல்ல வருவாங்கள்."

சிவகாமியால் எதுவும் பேசமுடியவில்லை. எப்போதும் துடுதுடுப்பாய் இருக்கும் தவராசா மிகவும் புத்திசாலி யாகவும் இருந்தான். வெளியே ஓங்கி வளர்ந்து நின்ற அந்த வாகை மரக்கிளையை உற்றுநோக்கியபடி இருந்த தவராசா திடீரெனச் சொன்னான் " இஞ்ச இருந்தால் நாங்கள் எப்படியோ சாகிறனாங்கள்தா னேம்மா?"

இந்த வார்த்தைகளை சிவகாமியால் ஜீரணிக்கமுடிய வில்லை. தன் மகனை மார்போடணைத்தபடி "அப்படிச் சொல்லாதயனை ராசா...." என்றவள் தன்மகனை ஆறுதற்படுத்த சக்திவாய்ந்த வார்த்தை கள் ஏதும் கிடைக்காதோ எனத் தவித்தாள். ஆனால்....

" அம்மா, நாங்கள் காட்டுக்குப் போவமேம்மா? அங்க புலியண்ணாவைகள் எங்களைக் காப்பாற்றுவினம்."

திடீரென தவராசா கூறியபோது சிவகாமி தடுமாறிப் போனாள். சில கணங்கள்தான்... அவள் தன்னை சுதாகரித்துக் கொண்டு நடந்து முடிந்தவைகளை மனக்கண்ணில் நிறுத்தியபோது..... அந்தத் துயர் தோய்ந்த முகத்திலும் ஒரு பிரகாசம்.....

அன்றைய இரவுப் பொழுதில் பாண்டிருப்புக் கிராமப் பகுதியை அண்டிய அடர்ந்த காட்டுப் பகுதியை நோக்கி சிவகாமி வேகமாக நடந்துகொண்டிருந்தாள். தாயின் கைகளை இறுகப்பற்றியபடி புது வேகத்துடன் நடந்துகொண்டிருந்தான் தவராசா.

பாடசாலை நாட்களில் இராணுவ அணியென வந்த தன் நண்பர்கள் மீது மறைந்திருந்து தாக்கிய காட்சி கள் தவராசாவின் மனதில் இப்போது அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்தன. ■

## கிழக்கு திமோர் விடுதலைப் போராட்டம்

**இந்தோனேஷியாவின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ள கிழக்குத் திமோரிலுள்ள மக்கள், தமக்கென்றொரு சுதந்திர நாடொன்றை அமைக்கும் நோக்குடன் கடந்த பதினைந்து வருட காலமாக விடுதலைப் போராட்டத்தை நடாத்தி வருகின்றார்கள்.**

**கிழக்குத் திமோர், இந்தோனேஷியாவிற்குத் தென்பகுதியிலும், அவுஸ்திரேலியா விற்கு இடையிலும் உள்ள தீவின் ஒரு பகுதியாகும். போத்துக்கேயரின் காலனிய ஆதிக்கம் நிலவிய காலத்தில், இந்தோனேஷியாவின் பகுதிகளும், கிழக்குத் திமோரும் போத்துக்கேய ஆட்சியின்கீழ் இருந்தன. இறுதியில் 1975ம் ஆண்டளவில் போத்துக் கேயர் கிழக்குத் திமோரைவிட்டு நீங்கியபோது, இந்தோனேஷிய ஆயுதப் படைகள் அங்கு அனுப்பப்பட்டு இந்தோனேஷியாவின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. FRETILIN என்ற தேசிய விடுதலை இயக்கத்தினால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. விடுதலைப் போராட்டத்தை நசுக்கும், இராணுவ பயங்கரவாத முயற்சிக ளின் விளைவாக கிழக்குத் திமோர் மக்களின் மூன்றில் ஒரு பங்கினர் கொல்லப் பட்டோ, காணாமல் போயோ உள்ளனர். இந்தோனேஷிய குடியேற்றவாதிகள் கிழக்குத் திமோரில் அரசினால் குடியமர்த்தப்பட்டு கிழக்குத் திமோர் மக்களின் குடித்தொகை அரைவாசியாகக் குறைக்கப்பட்டு வருகிறது.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






இன்றும் அடக்குமுறையும், இராணுவ அட்டூழியங்களும், கொடுமைகளும், சித்திரவதைகளும் தொடர்ந்தவண்ணமே உள்ளன. மக்களும் இடைவிடாது போராடியவண்ணமே உள்ளனர். ஆயுதப்போராட்ட நடவடிக்கைகளோடு, ஊர்வலங்கள், வேலைநிறுத்தங்கள் போன்ற அமைதிவழிப் போராட்டங்களும் இடம்பெற்று வருகின்றன. நீதிவிசாரணையற்ற தடுப்புக்காவல், சித்திரவதை, காணாமல் போதல் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற அமைப்புக்கள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

கிழக்குத் திமோர் மக்களின் அவலங்களை வெளிப்படுத்தும் அறிக்கையொன்று லிபரேஷன் என்ற மனிதஉரிமைகள் அமைப்பின் சார்பில், ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கமிஷனில் தமிழீழப் பிரதிநிதி ஒருவரால் வாசிக்கப்பட்டது.

கடந்தவருடம் மட்டும் நாற்பத்திரண்டுபேர் அரசாங்கப் படைகளால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளதாகவும், சித்திரவதைகள் தொடர்வதாகவும் அவ்வறிக்கை கூறியது. கிழக்குத் திமோர் மக்கள் விரைவில் விடுதலை அடைவது நிட்சயம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# கேள்வி - பதில்

திரு.கிட்டு

**கடந்த நாட்களில் விடுதலைப் புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தநிறுத்தத்தை உதாசீனம் செய்த ஸ்ரீ லங்கா அரசு தற்போது தான் யுத்தநிறுத்தத்தை அறிவித்திருப்பது ஏன்?**
*சுபாஸ், பாரிஸ்*

**விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச போர்நிறுத்தம் உலகத்தின் பார்வையில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?**
*கண்ணன், சார்சல்*

இந்த வருட ஆரம்பத்தில் 29 நாட்கள் புலிகள் தாமாகவே போர்நிறுத்தம் செய்து சமாதானத்திற்கான அழைப்பை ஸ்ரீ லங்கா அரசிற்கு விடுத்தனர். ஆனால் 10 நாட்களின் பின்னர் ஸ்ரீ லங்கா அரசு தாமாகவே போர்நிறுத்தத்தை முறித்துக் கொண்டு, குண்டுவீச்சையும் தாக்குதல்களையும் ஆரம்பித்தது. இதற்கு அடிப்படையாக இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது உண்மையில் தமிழ்ப் பிரச்சனையை சமரச முயற்சி மூலம் தீர்ப்பதற்கு ஸ்ரீ லங்கா விரும்பவில்லை என்பதும், இரண்டாவது ஸ்ரீ லங்கா இன்னும் இராணுவத் தீர்விலேயே நம்பிக்கை கொண்டுள்ளது என்பதுமே.

பிரேமதாசாவைப் பொறுத்தவரையிலும் மாகாணசபை போன்ற ஏதோ அரைகுறைத் தீர்வுகளின் மூலம் தமிழர் பிரச்சனையைத் தீர்க்க விரும்புகிறாரே ஒழிய தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மதித்து, அதற்குரிய தீர்வுகளைக் கொடுக்க அவர் தயாராக இல்லை:- அதேவேளை பிரேமதாசா தன்னை ஓர் சமாதான விரும்பியாக காட்டிக் கொண்டு, சமரச அழைப்புக்களை விடுத்துக் கொண்டு, இராணுவ நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தி வருகின்றார்.

புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலால் பிரேமதாசாவின் முகத்திரை கிழிக்கப்பட்டது. உலகத்தின் பார்வையில் புலிகள் சமாதானத்திற்கும், பேச்சுவார்த்தைக்கும் தயாராகவே உள்ளனர் என்பதும் புரியவே செய்தது. அதனால் பல சர்வதேச நாடுகள் ஸ்ரீ லங்கா அரசிற்கு அரசியல் ரீதியான அழுத்தங்களையும் கொடுத்து வருகின்றன.

அதேவேளை தற்போது கடந்த இருவாரங்களாக வட பகுதி மீது மிகவும் பாரிய இராணுவ நடவடிக்கையை ஸ்ரீ லங்கா அரசு மேற்கொண்டு வருகின்றது. ஸ்ரீ லங்கா அரசு தன்னுடைய முழு பலத்தையும் பாவித்து மிகப் பெரிய இராணுவ நடவடிக்கையை நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மீண்டும் போர்நிறுத்தம் பற்றியும், சமரசம் பற்றியும் பேசத்தொடங்கியுள்ளது. இது வழமை போல தன்னுடைய இராணுவ நடவடிக்கையின் தாற்பரியத்தை உலகிற்குத் தெரியவிடாமல் சமாதானப் போர்வையைப் போர்த்தவும் மேலும் இவ் இராணுவ நடவடிக்கையால் புலிகள் பலவீனமடைந்து சமரசத்திற்கு ஓடிவரலாம் என்ற நப்பாசையாகவும் இருக்கலாம்.

**அண்மையில் படுகொலை செய்யப்பட்ட ரஞ்சன் விஜயரட்ணாவின் மறைவுக்குப் பின்பு ஸ்ரீ லங்கா இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைகள், தாக்குதல்களில் மாற்றம் உண்டா?**
*ராஜன், பாரிஸ்*

ரஞ்சனின் மறைவு இராணுவத்தினர் மத்தியிலும் அரசியல் வாதிகளின் மத்தியிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஏனென்றால் ரஞ்சன் இருந்த போதும் சரி; இறந்த பின்பும் சரி; இராணுவ, அரசியல் முடிவுகள் அனைத்தும் பிரேமதாசாவினாலேயே தீர்மானிக்கப்பட்டு வந்தன:- தெற்கிலே சிங்கள மக்களின் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படுகொலைகளும் தற்போது தமிழீழப் பகுதியில் நடைபெறும் தமிழ் மக்களின் மீதான இனப்படுகொலை நடவடிக்கைகள் யாவும் பிரேமதாசாவின் பணிப்பிலேயும், பிரேமதாசாவின் தீர்மானத்தின் படியேயும் தான் நடைபெற்று வருகின்றன:-

பிரேமதாசா தன்னுடைய பெயரைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் தன்னை ஒரு வெள்ளை மனிதனாகக் காட்டிக் கொள்ளவும் ரஞ்சனைப் பாவித்து வந்தார். ஏதோ ரஞ்சன் தான் இச் செயல்களுக்கெல்லாம் காரணமானவர் என்றும் பிரேமதாசா சமாதானத்தை விரும்பும் சுத்தமான மனிதர் போலவும் இதுவரை காலமும் காட்டிவந்தார். ரஞ்சனின் மறைவு இன்று பிரேமதாசாவின் உண்மை உருவத்தை வெளிக்காட்டத்தான் செய்யும். ஆனாலும் அதற்கும் யாரும் அகப்படாமலா போவார்கள். மீண்டும் யாராவது ஒரு பாதுகாப்பு மந்திரி மேலோ அல்லது இராணுவத் தலைமைப்பீடத்தினர் மீதோ பழியைப் போட்டுவிட்டு பிரேமதாசா விகாரைகளுக்குச் சென்று புத்தரை வணங்கிக்கொண்டு இருப்பார். பிக்கு மார்களின் போதனைகளை ஏற்று தன்னை சிறந்த ஆத்மீக வாதியாகவும் காட்டிக் கொண்டிருப்பார்.

www.tamileelamarchive.com

அதேவேளை தமிழீழத்தில் பொருளாதாரத்தடை மூலம் தமிழர்களைப் பட்டினி போட்டு பணியவைக்கவும், கிழக்குப் பகுதியிலே தமிழர்களின் தலைகளைக் கொய்து சாக்கிலே கட்டி வீதியில் போட அனுமதியளித்தும் வருகின்றார். தமிழீழத்தின் பகுதியெங்கும் குண்டுவீசி மக்களைக் கொல்லும் வேளையில் இதனால் காயமடையும் மக்கள்கூட சிகிச்சை பெற முடியாமல் மருந்துகளைத் தடுத்தும் வருகின்றார்.

மொத்தத்தில் இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் பிரேமதாசாவின் பணிப்பிலேயே நடத்தப்படுகின்றன. ரஞ்சனின் மரணம் இராணுவ நடவடிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்தாது. அவை தொடரவே செய்யும்.

**இன்று தமிழீழத்தில் பெரும்பகுதியான நிலப்பரப்பு அதாவது 3/4 நிலப்பரப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாபட்டில் இருக்கின்றது என்று கூறுகின்றீர்கள், அப்படியாயின் எமக்கு இதில் ஒன்று புலனாகிறது. அதாவது எப்போதுமே தமிழீழ மக்களின் ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு இருந்து வருகிறது என்பதாகும். அப்படியாயின் ஏன் இப்போது தமிழீழத்தை பிரகடனப்படுத்தி மக்களாட்சியை விடுதலைப் புலிகள் நடத்தமுடியாது?**
*IVRY, V. G. A. C. K*

தமிழீழத்தின் பெரும்பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பது உண்மைதான். ஆனாலும் ஸ்ரீ லங்காவின் படைகள் தினமும் அப்பகுதியை கைப்பற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுத்தான் வருகின்றன. மேலும் விமானத் தாக்குதல்கள் தமிழீழப் பகுதி எங்கும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

ஸ்ரீ லங்கா அரசு தமிழீழப் பகுதி மீது பொருளாதாரத் தடையை விதித்து மக்களை பட்டினி போட்டுக் கொல்லவும் முயன்று வருகின்றது. நாம் பல இராணுவ வெற்றிகளைப் பெற்று பல பகுதிகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தாலும் இன்னும் எமது பலம் கூட்டப்பட்டு அவை நிரந்தரமாகப் பேணப்படல் வேண்டும்.

அதேவேளை பொருளாதாரத் தடையில் இருந்து விடுபட்டு எமது மக்கள் சுயமாக வாழும் நிலையும் உருவாக்கப்படல் வேண்டும். உணவையும், பிற அத்தியாவசியப் பொருட்களையும் உருவாக்குவதில் நாம் தன்னிறைவு பெறவேண்டும். நம் வளம் கொழிக்கும் கிழக்கு மாகாணப் பகுதி விடுவிக்கப்படல் வேண்டும். உணவு உற்பத்தி பெருக்கப்படல் வேண்டும்.

மேலும் அரசியலில் அக, புற சூழ்நிலைகளையும் தமிழீழத்திற்காகக் கட்டி எழுப்பவும் வேண்டும். இவைகள் எல்லாம் செய்து முடித்த பின்பே தமிழீழப் பிரகடனம் செய்யவேண்டும். அல்லாவிடில் வரதராஜப் பெருமாள் தமிழீழப் பிரகடனம் செய்தது போல் கேலிக் கூத்தாகிவிடும்.

**தமிழீழத்தில் இப்பொழுது நுகர்வுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இத்துடன் அவற்றிற்கு தட்டுப்பாடும் உள்ளது. இந்நிலைமையை காரணம் காட்டி சில வியாபாரிகள் பொருட்களைப் பதுக்கி கொள்ளை இலாபம் சேர்க்க நினைக்கின்றார்கள். இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லையா?**
*ஜேசெப், பாரிஸ்*

தமிழீழத்தில் மக்களுக்குத் தேவையான பொருட்களை பதுக்கி வைப்பவர்களுக்கு எதிராக புலிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அப்படியாக பதுக்கப்பட்ட பொருட்களை, அவர்கள் மீட்டு அவற்றை மக்களுக்கு விநியோகித்து வருகின்றனர். தமிழீழத்தில் வர்த்தகர் சங்கங்களும், வர்த்தக சங்கக் கண்காணிப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள், பதுக்கல், கலப்படம் போன்றவற்றைக் கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருகின்றன. நுகர்வுப் பொருட்களுக்குக் கூட ஓர் நிர்ணய விலை தீர்மானிக்கப்பட்டு அவ் நிர்ணய விலையிலேயே பொருட்கள் விற்பனை செய்யப்படவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கலப்படம் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்களை வர்த்தக சங்கக் கண்காணிப்புக் குழுவினர் கண்டுபிடித்து அவ்வர்த்தக ருக்கு அபராதம் விதிக்கும் நடைமுறையும் இருந்து வருகின்றது.


பதுக்கலில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கும் இக்கண்காணிப்புக் குழுவினரால் அபராதம் விதிக்கப்படும். விடுதலைப் புலிகள் போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுத்து வரும் வேளையில் சிவில் நிரிவாகத்தையும், மக்கள் தேவைகளையும் உரிய முறையில் செயற்படுத்தி வருகின்றனர். போராட்டம் என்பது வெறும் துப்பாக்கிகளைச் சுடும் சம்பவங்களை மட்டும் கொண்டதல்ல. பல பரிமாணங்களாய் வளர்ச்சி பெற வேண்டிய ஒன்று. இன்று பல துறைகளிலும் இவ்வளர்ச்சியை ஏற்படுத்த புலிகள் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

**தமிழீழத்தில் இருந்து வெளியில் செல்பவர்களுக்கு விடுதலைப் புலிகளால் அனுமதிச் சீட்டு வழங்கப்படுகின்றது. இதன்போது மக்கள் சில அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா?**
*விஜயகுமார், பாரிஸ்*

முன்பு அனுமதிச் சீட்டுப் பெறுவதற்கு அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மக்கள் கல்வியங்காட்டுப் பகுதிக்குச் செல்ல வேண்டும். இதனால் சனங்களுக்கு ஏற்பட்ட பல அசௌகரியங்களை நிவர்த்தி செய்ய தற்போது ஒவ்வொரு நகர்ப்பகுதியிலும் அனுமதிச் சீட்டு பெறும் வசதி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் பல அசௌகரியங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

காட்டைப் பிரட்டு;
கடலலையை கையிலெடு!
காற்றை ஊது;
கடும் நெருப்பைத் தீயிலிடு!

மாற்றங்கள் வேண்டும்.
மறுபிறப்பில் வேண்டாம்;
இப்பிறப்பில் உண்டாக்கு!

குனிந்து நடவாதே;
குற்றமுள்ளோர் யாரும் மோதிவிடக்கூடும்.

நிமிர்ந்து செல்!
பாதையைக் கவனி!
வழியைச் செப்பனிடு!!!



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# கடலும் அதன் வளங்களும்

கட்டுரைத் தொடர் - 2

கடலில் இருந்து நாம் எடுக்கக் கூடிய பயன்களை நான்கு வகையாகக் காணலாம்.

**1. கடல் நீர்**

கடல் நீரில் உள்ள இரசாயனப் பொருட்களை பிரித்தெடுத்து நமது தேவைக்கு உபயோகிக்கலாம்.
உ+ம் உப்பு : கடல் உப்பிலிருந்து பல இரசாயனப் பொருட்கள் பிரித்தெடுக்கப்பட்டு பல தேவைகளுக்குப் பாவிக்கப்படுகிறது. தமிழீழத்தில் பரந்தனில் உள்ள இரசாயனக் கூட்டுத்தாபனம் இத்தொழிலினைச் செய்கின்றது.
குடிநீர்: கடல் நீரிலிருந்து நன்நீரைப் பிரித்தெடுத்து குடிநீராகப் பாவிக்கலாம்.
மின்சக்தியைப் பெற்றுக் கொள்ளலாம்.

**2. கடல் நீரில் வாழும் உயிரினங்கள்.**

மீன் வகைகள் இன்று மனிதருடைய உணவிற்காகவும், மற்றைய பறவைகள், மிருகங்களின் உணவிற்காகவும் பிடிக்கப்படுகின்றன.

**3. கடல் நீரின் கீழ் உள்ள நிலப்பரப்பு.**

ஆழம் குறைந்த இந்த நிலப்பரப்பில் நீர்த் தாவரங்களைப் பயிரிட்டு, அவற்றை உணவிற்கும், மருந்து வகைகளிற்கும் பாவிக்கலாம்.

**4. நிலப்பரப்பின் கீழ் உள்ள கனிப் பொருட்களைப் பகுத்தெடுத்து மற்றைய தேவைகளுக்கு பாவிக்கலாம்.**

கடலில் இருந்து பெறக்கூடிய பயன்களை நாம் நான்கு வகையாகப் பிரித்துக் கொண்டோம். இவற்றில் முதலில் கடல் நீரிலிருந்து பெறக்கூடிய பயன்களை நாம் எடுத்துக்கொள்வோம்.

முதலில் கடல் நீரில் இருந்து நன்னீரைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். நன்னீர் குறைவாக உள்ள நாடுகளில், குறிப்பாக கடலோரம் உள்ள நாடுகளில் இம்முறை கையாளப்படுகின்றது. உதாரணமாக சவுதிஅரேபியா இவ்வாறு கடல்நீரில் இருந்து நன்னீரைப் பிரித்தெடுக்கின்றது.

இயற்கையாகவே கடலின் மேற்பரப்பில் உள்ள நீரானது சூரிய வெப்பத்தில் ஆவியாகி வளிமண்டலத்தை அடைகின்றது. இந்த ஆவியாகும் நீரின் அளவு ஓர் குறிப்பிட்ட விகிதத்தில்தான் இருக்கும். இவ் ஆவியாதலைக் கூட்டி, மீண்டும் ஆவியாகும் நீரைக் குளிரப்பண்ணி ஒடுக்கி வடித்து நன்னீர் பெறப்படுகின்றது. இம்முறையில் கடல்நீரை கலன்களில் வைத்து ஆவியாக்குவதற்கு சூரியவெப்பத்தையே நாம் பாவிக்கின்றோம். கடல் நீரில் இருந்து நன்னீரைப் பிரித்தெடுக்கும் முறை 1872ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. கூடுதலான தேவையும், விஞ்ஞான அபிவிருத்தியும் இன்று இச்செயற்பாட்டை விஸ்தரிக்கச் செய்துள்ளன. தமிழீழத்தில், குடாநாட்டில் இன்று நிலத்தடிநீரே பாவிக்கப்படுகின்றது. இந்நீர் வற்றிப்போக, உவர் நீராக மாறும் நிலை தோன்றும். நீண்டகாலத் திட்டத்தில் நாம் பார்க்கும்போது ஒரு காலகட்டத்தில் எமது எதிர்கால சந்ததியினர் இம்முறையை தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுவர். இன்றைய சூழ்நிலையில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நாம் ஏராளமான பணத்தை முதலீடு செய்ய வேண்டியிருக்கும். இன்று இம்முறையில் பெரிய அளவில் செய்யும்போது நாள் ஒன்றுக்கு மில்லியன் கலன்கள் அளவில் நன்னீர் உற்பத்தி செய்யப்படுகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அடுத்ததாக கடல்நீரில் இருந்து மின்சக்தியைப் பெற்றுக்கொள்ளலாம். கடல் நீரின் வெப்பம் மேற்பரப்பில் இருந்து கீழே செல்லச் செல்ல குறைந்துகொண்டு போகின்றது. இந்த வெப்பநிலை மாற்றமானது 0 - 1000m ஆழத்துள் சுமார் 19பாகைட - 25பாகைட வரை இருக்கும். இந்த வெப்பநிலையில் ஆவியாகி கூடுதலான அமுக்கத்தைக் கொடுக்கும் திரவங்களைப் பாவித்து மின் உற்பத்தி செய்யும் இயந்திரங்களை இயக்கி மின்சக்தியைப் பெறலாம். இத்தகைய ஓர் நிலையத்தை உருவாக்குவதற்கான ஆராய்ச்சிகளை சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் சிறீலங்கா அரசு செய்துகொண்டுவருகின்றது ( இது தமிழ்ப்பிரதேசக் கடல்பிரதேசத்தில் அல்ல). இம்முறை வளர்ந்துவரும் ஒரு தொழில்நுட்பமாகும். இதற்கு முதலீட்டுப் பணம் கூடுதலாகத் தேவைப்படினும், ஒரு காலகட்டத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியானது இம்முதலீட்டுத் தொகையை குறைக்கும். அதேவேளை தமிழீழத்திற்குத் தேவையான மின்சக்தியைப் பெற நாமும் இம்முயற்சியைக் கையாள வேண்டிவரும்.

கடல்நீரில் இருந்து இரசாயனப்பொருட்களை பிரித்தெடுத்து எமது தேவைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

முதலில் நாம் அனைவரும் சமையலுக்குப் பாவித்துக் கொள்ளும் கறியுப்பு கடல்நீரில் இருந்துதான் பெறப்படுகின்றது. இது கடல்நீரை பாத்திகளில் மறித்துக்கட்டி, சூரியவெப்பத்தில் நீரை ஆவியாகப்பண்ணி எடுக்கப்படுகின்றது. ஆனால் இவ்வாறு பெறப்படும் கடல்உப்பில் பல இரசாயனப் பொருட்கள் கலந்துள்ளன. பெருமளவில் பெறப்படும் கடல் உப்பானது, தொழிற்சாலையில் பகுப்புச் செய்யப்பட்டு அதில் உள்ள இரசாயனப் பொருட்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. இதன்போது ஊத்தைச்சோடா பெருமளவில் தயாரிக்கப்படுகின்றது. இதுவே பின்னர் சவர்க்காரத் தயாரிப்பிற்கும் பாவிக்கப்படுகின்றது. இதேவேளை பிரித்தெடுப்பின்போது வெளியேறும் மற்றைய இரசாயனப் பொருட்கள் சிறிய அளவிலேயே கிடைக்கின்றன. இவற்றையும் வெவ்வேறு பொருட்களை உற்பத்திசெய்யவும், பரிசோதனைச் சாலைகளில் ஆராய்ச்சிகளுக்கும் பாவிக்கின்றனர். இலங்கையில் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் பகுப்புச் செய்யப்படும் போது சிறிய அளவில் கிடைக்கும் பொருட்கள் விரையமாக்கப்படுவதால் தொழிற்சாலை நட்டத்தில் நடத்தப்படுகின்றது. அதேவேளையில் விரையமாக்கப்பட்ட பொருட்களால் வழிமண்டலமும், சுற்றாடலும் அசுத்தப்படுத்தப்படுகின்றது. ■

......தொடரும்......




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



... ம் .... கு ........
ஒண்ணுமே .. வேணா....
இப்பல்லாம்;
அம்புலிமாமா அழகாத் தெரியல்ல!
வண்ணத்துப் பூச்சி, தம்பளப் பூச்சி
தும்பி ....
சீச் ... சீ .. அழகாவேயில்ல, வேணா ......
பொம்மைப் பாப்பா அழுகுண்ணி .... வேணா !
முட்டாசு, ஐசுப்பழம் ... ஒண்ணுமே வேணா .....
... ம் ... ம் ... பசிக்குது; சோச்சிதான் வேணும்!

தமிழீழ எல்லை தாண்டி உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற, எமது ஈழதேச மக்களே!
அங்கே தவிக்கின்ற எமது செல்வங்களின் அழுகுரல் உங்களுக்குக் கேட்கின்றதா ...? அவர்களது ஏக்கம் நிறைந்த விழிகளில் துளிர்விடும் கண்ணீரின் அர்த்தம் புரிகின்றதா?
ஈரலிப்பான இதயங்கள் அவற்றை உணர்ந்து கொள்ளட்டும்!
மனித நேயம் கொண்ட பாசக்கரங்கள் அந்தப் பிஞ்சு மலர்களை பக்குவமாய் அரவணைக்கட்டும்!

தமிழர்புனர்வாழ்வுக் கழகம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com